மகவியன வேகக்கை கடைசி பாகமாக வைக்கு சுலோகங்களை

"புண்டரீகபுர மஹாத்மியம்"

(வடமொழிக்கு நேர் மொழி பெயர்ப்பு)

"நடன குஞ்சிதபாத சபை வெளியீடு" நெ. 28.

எழுதியவர் :
புராணரத்தினம் உபந்யாஸசரபம்
ஸம்ஸ்க்ருத விசாரதா
சிதம்பரம் C. S. ஸச்சிதானந்ததீக்ஷிதர்,
நெ. 6, தெற்குஸந்நிதி, சிதம்பரம்.

கிடைக்குமிடம் :
"புராண நிலையம்"
"நடன குஞ்சிதபாத சபை"
தெற்கு ஸந்நிதி, சிதம்பரம்.

முகவுரை.

ஸ்ரீநடராஜ மஹாத்மியங்களை நன்கு விளக்கும் ஐந்து மஹாத்மியங்களுள் 2-வது மஹாத்மியமான **புண்டரீகபுர மஹாத்மியம்** மொழி பெயர்த்து வெளியிடப்படுகிறது. உலகில் ஜனங்களின் அஜ்ஞானத்தை ஒழித்து ஜ்ஞானத்தை கொடுப்பதே முக்யம் என அது உரைப்பது. இம்மஹாத்மிய விஷயம் உலகில் கர்மாதான் உயர்வு; அது தவிர வேறு இல்லை என உரைக்கும் ஜைமினியின் சாஸ்த்ர லக்ஷணத்தை மறுத்து ஜ்ஞான ப்ரதானமே உயர்வு தர்சனம்தான் முக்ய முக்தி. இன்பம் என உலகிற்கும் ஜைமினிக்கும் முக்யகாரணமாக வ்யாஸர் ஒருஸமயம் நான்கு சிஷ்யர்களுள் ஒருவரான ஜைமினிக்கு பரந்தநோக்கத்துடன் கேள்விக்கு பதில் உரைத்த விஷயமாகும். அவ்விதம் அவர் கேட்டதோடு அல்லாமல் அதை அனுஷ்டித்து தாண்டவ தரிசனமும் கண்டார் என இம்மஹாத்மியம் கூறுகிறது. ஸாரூப்யம் முதலிய முக்திகள் முறையே செய்து ஸம்பாதிக்க வேணும்.

ஸாயுஜ்யம் நான்காவது அப்படி அல்ல உடனே முக்தி ச்ரமப்
ாமல் அளிக்கக்கூடியது. அதையே உயர்வு என கருதி மஹர்ஷி
பலர் கஷ்டப்பட்டு எளிதில் அடைந்ததாக புராணம் உபநிஷத்
இதிஹாஸம் முதலியன வற்புருத்தும் விஷயம். உல
ள்ள ஆன்மாவாக பிறந்த யாரும் அதை அடைவதே முக்ய
பின்பற்றுதல் மிகையாகாது என்பது துணிபு. இந்த
்தை விரிவான முறையில் கேட்ட கேள்விகளுக்கு அன்
யில் வ்யாஸர் ஜைமினிக்கு சொல்லியது.

ாஜரின் அருள ... கஷ்டப்படாமல் தர்சனம் செய்த
ி என ... செய்துள்ளார்.

முதலியன வேதத்தை கடைசி பாதமாக வைத்து சுலோகங்களை ஸ்தோத்ரமாக மறுபடி பாடினர் என்றும் நாரதீய புராணம் 18 புராணங்களுள் முக்ய முள்ள க்ரந்தம் கூறுகிறது. அதன் கடைசியில் சொல்லப்பட்டுள்ளது மிக்க ஆச்சர்யம் உடையதாகும்.

ஆகவே இப்புராணம் இன்னும் முட்டாள்கள், அஜ்ஞானிகள், ஞானிகள் இவர்களுக்கும் முக்தி ஈசன் கொடுத்துள்ளார் என்றும் வாக கூறி உள்ளது. ஆயினும் இந்த புராணம் ஈசனது அருளை பெற முக்ய வழிகாட்டி ஆகும் என நம்புகிறேன். சுலோகங்களின் உண்மை மொழி பெயர்ப்பே கடைபிடித்து எழுதப்பட்டுள்ளதை பார்த்த வித்வான்களும், அன்பர்களும் ஏதேனும் தவறுதல் இருந்தால் அதை பொருட்படுத்தாது அன்பர்கள் கூர்ந்து கவனித்து என்னையும் மஹாத்மியத்தையும் நன்கு ஆதரிக்க கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
புராணரத்னம் உபந்யாஸசரபம்
ஸம்ஸ்க்ருதவிசாரதா
C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர்,
நெ. 6, தெற்குஸந்நிதி, சிதம்பரம்.
20—1—53.

32/1

உ

முகவுரை.

உலகில் விளங்கும் ஸகல க்ஷேத்திரங்களிலும் சிதம்பரக்ஷேத்ரம் மிகஉயர்ந்தது என்ற புராணங்களும் இதிகாசங்களும் சிறப்பித்து கூறுகின்றன. இவ்விதமான சிறப்புடைய இந்த ஸ்தலத்தின் மஹிமையை விளங்கும் புராணங்கள் ஐந்து உள்ளன.

அவைகளுள் புண்டரீகபுர மஹாத்மியம் என்பது ஒன்று. இது வடமொழியில் உள்ளது. புண்டரீகபுரம் என்பது இத்தலத்திற்கு உரிய பெயர்களுள் ஒன்று. உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்திலும் பரமசிவன் வஸிக்கின்றான் என்பது உபநிஷதங்களிலும் கீதையிலும், கூறப்படுகின்றது. அதேபோல் விராட்புருஷனுடைய இருதயகமலமாகிய இந்த ஸ்தலத்தில் பரமசிவன் வசிக்கிறான். ஆதலால் இத்தலத்திற்கு புண்டரீகபுரம் என்று பெயர் வழங்கப் படுகிறது.

தரிசித்தமாத்ரத்தில் முக்தி அளிக்கும். இந்த க்ஷேத்ரத்தின் மஹிமையை உலகில் ஸகலரும் அறிந்து கொள்ள விரும்பி "நடன குஞ்சிதபாத சபை" ப்ரஸிடெண்டும், புராணரத்னம், உபந்யாஸ சரபம், ஸம்ஸ்கிருதவிசாரத, என்ற சிறப்புகளை பெற்றவருமாகிய C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர் இப்புராணத்தை தமிழில் எழுதி வெளியிடுகிறார்.

இவர் தனது மிகுந்த முயற்சியால் பலநூற்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவற்றுள் இது 28-வது வெளியீடாகும்.

இதுபோல் மேலும் பலநூல்களை மொழிபெயர்த்து பலருக்கும் உபயோகப்படும்படி செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் க்ருபை கூர்ந்து அருளுவாராக! பக்திமான்கள் அனைவரும் இந்நூலை வாங்கி படித்து இத்தலத்தின் பெருமையையும், நடராஜரின் குணமஹிமைகளையும் அறிந்து பேரின்பமுக்தி அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

சிதம்பரம் 4—2—53 | **வித்துவான் D. தங்கஸபாரத்ன தீக்ஷிதர்**
ஆறுமுகநாவலர் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்
98. A. தெற்குவீதி, சிதம்பரம்.

"புண்டரீகபுர மஹாத்மியம்."

(வடமொழிக்கு மொழி பெயர்ப்பு.)

எதினின்று இந்த அண்ட பிண்ட சராசர ஜகத் முழுமையும் உண்டாயிற்றோ? அந்த நடேசருக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

சிவன், அம்பிகை, விக்னேச்வரர், நந்தி, கங்கை, விருஷபம், இவர்களோடு கூடிய ஈசனுக்கும் நமஸ்காரம் செய்கிறேன்.

ரிஷிகள் ,— பகவானே! ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞான கருணாநிதியே! புண்டரீகபுர மஹாத்மியம் ஸங்க்ரஹமாக சொல்லியதைகேட்டோம். மறுபடியும் விஸ்தாரமாக கேட்க; குருவே! பெரியதோர் ஆசை எங்களுக்கு உள்ளது. நாங்கள் உம்மால் அநுக்ரஹிக்க எற்படுமேயாகில்; புண்யஸித்தியே உண்டாகும்.

ஸூதரே! எங்களுக்கு சொல்லும்! அடிக்கடி உங்கள் தாமரை போன்ற முகத்தினின்று உண்டான வாக்ய அமிர்தபானம் செய்வதில் எங்களுக்கு ஆசை இன்னும் அதிகமாகிறது. மனுஷ்யனுக்கு, அமிர்தமே ஸந்தோஷ உருவம்.

ஸூதர்! ப்ராம்ஹணர்களே! பரமேச்வரனது தாமரை போன்ற பாத சேவை உள்ளவர்களுக்கு இதுவே அதிக ஆசையை கொடுக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆச்சர்யமில்லை. நீங்கள் உலகில் க்ருதார்த்தம் அடைந்தவர்கள். ப்ரம்ஹாதிகளுக்குக்கூட கிடைக்கமுடியாததை அடைந்தவர்கள், எவர்களுக்கு குறைவில்லா க்ஷேத்ரமாஹாத்மியம், சுச்ரூஷை இவை உண்டாகிறதோ? அவர்களுக்கு க்ருதார்த்த தன்மை கட்டாயம் உண்டாகும். இம்மஹாத்மியத்தை விஸ்தாரமாக சொல்ல சேஷனாலும் முடியாது. இருந்தபோதிலும் ச்ரத்தையுடன் கேளுங்கள். நான் சுருக்கமாக சொல்லுகிறேன். முன்பு புண்யசாலிகுரு எனக்கு இந்த க்ஷேத்ர ரஹஸ்யத்தை சொன்னார். உங்களுக்கு ச்ரத்தை இருக்குமானால் இது கொடுக்க வேண்டியதுதான். வேறுயாருக்கும் கொடுக்ககூடாது. நீங்கள் நாஸ்திகர்கள் ஸமீபத்தில் படிக்ககூடாது. என இதை பகவான்வ்யாஸர் எனக்கு சொன்னார். அதை இதற்கு முன்பு, நான் யாருக்கும் சொல்லியதில்லை. அப்படி இருந்தும்; அதை ஆஸ்திகோத்தமர்களான உங்களுக்கு நான் சொல்லப்போகிறேன். முதலில் எனது குரு வ்யாஸர் ஜைமினிக்கு சொன்னார். கேட்கிறவர்கள் ச்ரத்தையுடன் கேட்கவேணும்.

ரிஷிகள் :— பாபமில்லா கருணையுடைய ஸூதரே! அது முழுமையும் விஸ்தாரமாக எப்பொழுது சொல்லப்பட்டது? எவ்விடத்தில் நடந்தது? அதை சொல்லும்! என்ற அவ்வார்த்தையை கேட்டு வேதவ்யாஸர் குருவை நினைத்து புண்டரீகபுர மஹாத்மியத்திற்கு காரணரான அந்த ஸபாபதியையும் நினைத்து ஆனந்தகண்ணீர்விட்டு, மயிர்க்கூச்சல் அடைந்து, கொஞ்ச நேரம் பரமபக்தியால் பேசாமல் இருந்தார். மறுபடியும் விழித்து நல்ல வ்ரதானுஷ்டானமுடைய முநிகளை கண்களால் பார்த்து திக்கல் வார்த்தையுடன் தனது குரு, ஈச்வரன், இவர்களை மறுபடியும் நமஸ்கரித்து, ஸூதர் வார்த்தை சொல்ல ஆரம்பித்தார்.

ஸூதர்:— நல்லது! நல்லது! பாக்கியமுள்ள மஹாப்ராஜ்ஞர்களான உங்களால் புண்டரீகபுர மஹாத்மியம் நான் நினைக்க ஏற்பட்டது. எனக்கு குரு எதை சொன்னாரோ? அவ்வுண்மையையே தத்வமாக சொல்லுகிறேன்.

முன்பு த்வாபரயுகத்தின் ஆரம்பத்தில் பகவான் வ்யாஸர் அநேக வ்ருக்ஷங்கள், பக்ஷிகள், மிருகங்கள், முநிகள் நிறைந்த பரந்த விஸ்தீரணமுடைய சேவையுள்ள இடத்தில் தீர்த்தங்களில் சேர்ந்த கொடிகள், யோகி கூட்டம், வித்தர்கள், இவர்களால் ஸேவிக்கப்படும். தேவர்களும், ஜனங்களும், எல்லாருது புஷ்பங்களும், வ்ருக்ஷங்களும், மதங்கொண்ட வண்டு கூட்டம் இவை கோஷிக்கும்படி நெல்லிக்கனிபோல் அலங்காரமடைந்த கங்கையில் தாமரை, கல்ஹாரம், இவைகளது துளிகளால் அலங்கரித்த காற்றுடைய புண்யமான பதரிகாச்ரமத்தில் நாராயண அம்சமடைந்த வியாஸர் கொஞ்சகாலம் வஸித்திருந்தார்.

பரம க்ருபையுடன் மந்தபுத்தி உள்ள மநுஷ்யர்களை நினைத்து பரமேச்வர ப்ரஸாதத்தால் வேதசாஸ்த்ரங்களை விஸ்தாரமாக சொன்னார். வேதங்களையும் விஸ்தாரமாக சொன்னார் என்பதினால், வேதவியாஸர் என அவரை சொல்லுகின்றனர். நெல்லிமர அடியில் வசித்ததால் பாதராயணர் என்றும் சொல்லுகிறார்கள். அந்த மஹாத்மாவால் வேதராசிகள்; நான்கு பாதமாக செய்யப்பட்டு ரிக்வேதம் முதலிலும், யஜுர்வேதம் இரண்டாவதாகவும், ஸாமவேதம் மூன்றாவதாகவும், அதர்வணவேதம் நான்காவதாகவும் இதிஹாஸ புராணங்கள் ஐந்தாவதாகவும், சொல்லப்படுகிறது. வியாஸர்; பைலர், முதலிய முனிகளுக்கு இவைகளை அத்யாபனம் செய்வித்து; ரிக்வேதத்தை சொல்ல பைலர் என்ற முனியை கல்ப்பித்தார். யஜுர்வேதத்தை சொல்ல வைசம்பாயனரையும் ஸாமவேதத்தை சொல்ல ஜைமினியையும், அதர்வணவேதத்தை சொல்ல ஸுமந்துவையும், இதிஹாஸ புராணங்கள் சொல்ல என்னையும் ஏற்பாடு செய்தார்.

வேத வேதாந்தங்கள் எல்லோர்க்கும் அநேக விஷயங்களை அநேக விதமாக ப்ரகாசிக்க செய்யும் தன்மை. ஆகையால்; அதினின்று அல்ப

புத்தியுடைய மநுஷ்யர்களுக்கும் மறுபடியும் கருணையுடன் ப்ரம்ஹம் நினைத்து பரமேச்வர ஆஜ்ஞையால் வேதாந்தவாக்கியங்களுக்கும் ஸூத்ரமும் செய்துவைத்தார். மறுபடியும் கர்மகாண்ட வாக்கியங்களுக்கு அர்த்தம் நிச்சயிக்க நியமித்த ஜைமினி கருணை மனதுடன் அம்முநி மஹேச்வர அநுக்ரஹத்தால் பன்னிரண்டு முநிகளுக்கும் வேதாந்த ஸூத்ரார்த்தத்தை அத்யயனம் செய்துவைத்தார். அதையும் ஜைமினி குருவுக்கு தெரிவித்தார்.

வியாஸர் அதைகண்டு ஸந்தோஷமடைந்து அவரை வார்த்தையால் பூஜை செய்தார். தன் ஸூத்ரங்களை குருதானே அத்யயனம் செய்து வைத்தார். மறுபடி ஜைமினி முதலான சிஷ்யர்களுக்கும் வியாஸர் சொன்னார். உலகங்களில் இது குறைவில்லா பலம் அடைவிக்கும். நான் அவதாரம் அதற்காகவே செய்தேன். நான் அந்நாளில் ஸமஸ்தவேதங்களையும் விடுவித்தேன். ஸ்த்ரீ, சூத்ரன், ப்ராம்ஹணன் மற்றுமுள்ள பந்துக்களுக்கும் நான் செய்ததிற்கு குறைவில்லாத்தன்மை அடைவதே எனது நோக்கம் என மறுபடியும் ஸங்க்ரஹமாய் இதிகாசபுராணங்களையும் செய்தார். என்னால் செய்த ஸூத்ரமும் ஜைமினியால் செய்தஸூத்ரமும் பாபமற்றது. எனது அவதாரம் சுலபமாக காண்பதிற்கே என்பதில் ஸந்தேஹமில்லை,

இதன் பிறகு நல்ல நிலைமையில் எனது புத்தியை நீங்கள் எல்லோரும் கேட்டு இச் சுபவேதமார்க்கத்தில் இருக்கவேணும்! இதை கஷ்டப்பட்டு ஸ்தாபிக்கவேண்டியதே உங்கள் கடமை, என சொல்லி பேசாமல் இருந்தார்.

பிறகு ஜைமினி ஸாக்ஷாத்தாக நமஸ்கரித்து அஞ்சலி செய்து குருவை வணக்கத்துடன் கேட்டார்.

ஜைமினி— உம்மால் இவ்விஷயம் சொல்லப்பட்டது என்பதில் ஸந்தேஹமில்லை. மஹாத்மாக்களுக்கு விளங்குவது தாரணமே. ஸ்வர்க்கத்தை காப்பாற்றுதல் தான் உள்ளது. அப்படி இருந்தும் எங்கள் வார்த்தையை தெரிந்து பதில் சொல்லவேண்டியது. சிஷ்யனாகிய உங்களுக்கு ஸாக்ஷாத்தாக சிக்ஷிக்கப்படுகின்றன. அப்படி இருந்தும்; எனக்கு அபரோக்ஷஜ்ஞானமில்லை; அம்முக்தி உபாயத்தை நீர் எனக்கு கருணையுடன் சொல்லவேணும்,

ஸூதர்;—என கேட்டதும்; ஜைமினியை கூப்பிட்டு இந்த ரஹஸ்யத்தை சொன்னார்.

வ்யாஸர் :—ஸாதுவான குழந்தாய்! உன்னால் இது கேட்கப்பட்டது. இது உங்களுக்கும், உலகங்களுக்கும் ரொம்பவும் ஹிதம் கொடுக்க வல்லது.

உனக்கு உபாயம் சொல்லுகிறேன், உனக்கும், மற்றவர்களுக்கும், முக்தி கொடுக்க கூடிய ஈசன் ப்ரஸாதத்தால் எனக்கு அறியாதது ஒன்றுமில்லே. ஜ்ஞானத்தால்தான் முக்தி உண்டாகும். வேறு அநேகம் கோடி கர்மாக்களால் வேறு ஒன்றும் முடியாது. ஜ்ஞானம் வேதாந்தவாக்யத்தினின்று உண்டானது, மற்றவை எல்லாம் அஜ்ஞானம் என எண்ணப்படுகிறது. அதுவும்; ஜீவப்ரம்ஹ ஐக்ய விஷயம். மற்றவை அப்படி இல்லே. அதுவும்; ஈச்வர ப்ரஸாதத்தினுலும், குருவின் அநுக்ரஹத்தாலும் தான் கிடைக்கும். அவ்விதமே வேதாந்த வாக்யங்களுக்கு தாத்பர்யம் விசாரணையால் தான் சிவஜ்ஞானம் உண்டாகும். இது ஸத்யமாக சொல்லப்படுகிறது. வேறுவிதமாய் இல்லே. ஈசன் அநுக்ரஹம் சித்திக்குமேயாகில் ப்ராம்ஹணன், சண்டாளன், ஸங்கரஜாதி, ஸ்த்ரீ, சூத்ரன், தேவர்கள், கந்தர்வாள், யக்ஷர்கள், புழு, பூச்சி, வெட்டில்பூச்சி, முதலியவைகளுக்கும், ஈச்வரஜ்ஞானம் உண்டாகிறது. வேறு எதினுலும் ஜன்ம கோடியானுலும் உண்டாகாது.

பரமேச்வர பக்தியுடன் வேதவாக்யங்களே கஷ்டப்பட்டு விசாரித்து முடிவை அறிந்து நீ ப்ரம்ஹஜ்ஞான ப்ரம்ஹமோக்ஷம் அடையப்போகிருய். உன்னுல் இது சொல்லப்பட்டது. முழுமையும் ஸம்மதத்தில் ஸந்தேஹமில்லே. அதுவும் ஜ்ஞானம்தான். ஆனுல் அது அபரோக்ஷ முக்தியை கொடுக்காது, நான் அபரோக்ஷஜ்ஞான உபாயம் உனக்கு சொல்லுகிறேன். ஸாமவேதமறிந்த சந்தோகர்கள் ஹாளன்ற பெயரிய வித்யையை அநுஷ்டிக்கிருர்கள். அங்கு ப்ரம்ஹபுரம் என்ற வீட்டில் புண்டரீகபுரம் என்ற வீடு. அவ்விடம் தஹராகாசம் இருக்கிறது. அங்கு தப்ராகாசமும் காணப்படுகிறது. புண்டரீகமத்தியில் எந்த ஆகாசம் என்னுல் சொல்லப்பட்டதோ? அது உனக்கு தைவம் என அறிய தேடவேணும்.

இதுவே உனக்கு சொல்லப்படுகிறது. எதில் வெளிஆகாசமோ? அதில் உள் ஆகாசம் நடுவாக உள்ளதும், அதுவே ஆகாசம், பூமி இவை இரண்டிலும், அதின் நடுவிலேயே சேர்ந்துள்ளது. அக்னி, வாயு, ஸூர்யன், நக்ஷத்ரம், சந்த்ரன் முதலியவர்களே காண உரிமை இடம். அந்த மஹத்தினின்று தான் வ்யாபகமாக இவைகள் உண்டாயிற்று. மரணம், ஜ்வரம்,ஸோகம், பசி, கொல்லுதல் இவை இன்றி ஸத்யகாமம், ஸத்வம், ஸத்யஸர்வஸங்கல்பம் என அதுவே ஸர்வத்திற்கும் தாரணமுள்ளது. பேதமின்றி அறிந்து அதை அடைந்தால் தான் அம்ருதம் அடையும் தன்மை. அதுதான் இவ்விடம் என்னுல் தஹர வித்யை என உனக்கு உதாரணமாக சொல்லிய ஜ்ஞானம், அபரோக்ஷ வித்திக்காகவே சாந்தோக்ய உபநிஷத் சொல்லி உள்ளது.

ஜைமினி:— எது வரை நன்ருக இவ்வித்யை எனக்கு சொல்லப்

பட்டதோ? அதை கொஞ்சம் புத்தி உள்ள நான் அறியமுடியவில்லை. ஆகையால் இப்பொழுது இப் ப்ரம்ஹபுரமுடைய புண்டரீகபுரம் என பெயரிய வீடு என்றால் என்ன அது.? அங்கு என்ன கிடைக்கும் ? அதை நீர் எனக்கு சொல்லும்! என வ்யாஸர் கேட்டதும்; எது ப்ரம்ஹம், ஸச்சிதானந்தம், பரிபூர்ணம் என எங்கும் காணவில்லையோ? அதுகாரணங்களால் தென்படாது. அது சரீரத்தில் தான் காணப்படுகிறது. அவ்விடத்தில் தான் ப்ரம்ஹபுரம். அதில் தாமரைபோன்ற ப்ரகாசம் காணும் தஹரம் ஹ்ருதயம், உள்ளது அங்கு உண்மை என்பது. அந்த புண்டரீகபுரம் என பெயரிய இவ்வீடு என உனக்கு சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் ப்ரம்ஹம் இருக்கிறது. அதினால்தான் வீடு என அதை சொல்கிறது. வீடு தேஹத்தில் இருக்கிறது. அதினால் தான் தேஹம்புரம் என பெயர் பெறுகிறது. எதில் ப்ரம்ஹம் இருக்கிறதோ? அது புண்டரீகம் என பெயருள்ள வீடு. அதில் ஆகாசத்திற்கு ஸமான உருவமுள்ள உருவம் அது, ஆகாசம் என பெயர் அடையும், அதுவே சொல்லிய குணங்களுடன் ஹ்ருதய மத்தியில் நன்கு உபாஸிக்கவேணும். முடிவில் அபரோக்ஷம் கட்டாயம் உண்டாகும். ஸந்தேஹத்திற்கு காரணமே இல்லை. அது தஹரவித்யை என பெயர் அடைந்து பண்டிதர்களால் இவ்விதம் சொல்லப்படுகிறது.

ஒன்று ஆத்யாத்மிகம், மற்றொன்று ஆதி பௌதிகம். ஆத்யாத்மீகி என்பது என்னால் சொல்லப்பட்டது. மற்றொன்றும் சொல்லப் போகிறேன். ஜகத் ஸ்ருஷ்டியை செய்த அதுதான் ப்ரம்ஹம் என சொல்லப்படுகிறது. உலகமே அதற்கு சரீரம். அதினால்தான் ப்ரம்ஹபுரம் என்றும் சொல்வது. தாமரை போன்ற ப்ரகாசமுடைய அதை முனிச்ரேஷ்டர்களால் ஹ்ருதயம் என சொல்லப்படுகிறது. அதினால் தான் புண்டரீகபுரம் இவ்விடம் அவ்வீடுஎன பெயரடைகிறது. அதை வ்யாக்ரபுரம் என்றும் சொல்லுகிறது. அவ்விடம் தப்ரஸபா மத்தியில் எப்பொழுதும் நர்த்தனம் செய்கிறார் அதுதான்.

இதை ஆகாசம் என்றும் சொல்லுகிறார்கள். சங்கரர், சந்திரசேகரர், நிரஞ்சனர், நிஷ்களங்கர், சர்வகர், என வெகு திருஷ்டாந்தங்களாலும் அதை பண்டிதர்கள் ஆகாசம் என சொல்லுகிறார்கள். அதுவும் சித்ரூபம் என அறியவேண்டியது. வெளிக்கார்யம் போல் முட்டாள் தன்மை இல்லை. ஆகையால்; சிதம்பரம் என அதை சொல்லி, அதில் சபாபதி இருக்கிறார். அங்கு சிதம்பர க்ஷேத்ரமும் உள்ளது என அறியவேண்டியது,

அதுவே நித்யம் தியானம் செய்யவும், நமஸ்கரிக்கவும் எப்பொழுதும் உள்ளது. ஸபாபதியே நர்த்தனம் செய்யதகுந்தவர். பூஜிக்க தகுந்தவர்.

உனக்கு இவ்விதம் உள்ளதை சீக்ரம் அறிந்து ஸம்ஸ்காரத்தினின்று மோக்ஷம் அடையவழி. இப்புண்டரீகபுரத்தில் எந்த ஜந்துக்கள் வஸிக்கிறதோ? அவைகள் எல்லாம் தஹரஉபாஸகர்களே என்பதில் ஸந்தேஹமில்லை. அவர்களே ஜன்மஸாபல்ய தன்மை உள்ளவர்கள். அவர்கள் ஸாதுக்கள், நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள். இவ்விதம் உனக்கு நன்கு தஹரவித்யை சொல்லப்பட்டது. ஆத்யாத்மிகீ எல்லோராலும் அடைய முடியாதது. அதில் ஸந்தேஹமில்லை ஆதிபௌதிகம் என்ற வித்யை முக்தியை முன்னிட்டே அநுஷ்டிக்க உள்ளது.

அவர்தான் தப்ரஸபா மத்தியில் நிர்த்தனம் செய்யும் பரமேச்வரன் அவர் தரிசனமே முக்யம். இவ்விடத்தில் நன்றாக என்னால் சொல்லியது வேறு ஒன்றும் இல்லை. ஸதாதர்சனத்தால் ஸர்வ தேஹங்களுக்கும் முக்தி என கைவல்ய சாகிகள் ஆதரவுடன் செல்லுகின்றனர். ஸ்வராட் என்ற பெயரிய தேவரது ஹ்ருதயமத்தியில் தாமரை அடைந்து உமாஸஹாயரான நீலகண்டர், மூன்றுகண்ணுடையவர், ப்ரபு, நித்யம் பரமானந்த சித்கனர் நர்த்தனம் செய்கிறார். அவரை மநுஷ்யன் பார்த்த உடனேயே முக்தி அடைகிறான். எவர் ஸர்வ தேவதைகளுக்கும் ஹேதுவோ? விஷ்ணுவுக்கு அதிகாரமுடைய மஹரிஷியோ? அவர் ப்ரம்ஹாவை உண்டாக்கினவர். அவர் நித்யம் ஸத்அபிப்ராயமாக சேர்ந்தவர்.

தஹரம் பாபமற்றது. பரமேச்வரனது வீடு போல் உள்ளது. அது தாமரை போன்ற பட்டணத்தில் உள்ளது. அவ்விடத்தில் தஹராகாச உருவம். எவர் சாந்தரோ? அவரே நித்யர். எல்லோராலும் உபாஸிக்க தகுந்தவர் வேதத்திற்கு ஆதியிலும், மத்தியிலும், கடைசியிலும், இந்த ருத்ரர் ஸர்வலயத்துடன் போதிக்கபடுகிறவர். அவ்விடத்தில் உபாஸிக்க தகுந்த ருத்ரன் ஸாக்ஷாத்சித்கனனந்தரூபன் என சொல்லப்படுகிறது. அது யஜுர்வேத வாக்யம். அவ்விதமே ரிக்வேத வாக்யமும்; அவ்விடத்தில் சாகாந்தரங்களில் முழுமையும் வ்யாக்யான உருவமுள்ளது. இது என் வார்த்தை அநுஸரித்த மார்க்கம் இதுதான்.

இவ்விதம் க்ஷேத்ர மஹாத்மியத்தை அறிந்து புண்டரீகபுரமடைந்து தேவரை பார்த்து மோக்ஷமடை. சித்சபையில் நித்யம் நர்த்தனம் செய்கிறவரது விஷயம் உண்மையாக என்னால் உனக்கு சொல்லப்பட்டது.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

ஸூதர் இவ்விதம் வ்யாஸர் வார்த்தையை ஜைமினி கேட்டு உடனே ஸந்தோஷமடைந்து மறுபடியும் வணக்கத்துடன் தனது குருவை கேட்டார்.

ஜைமினி:— உம்மால் சொன்ன வித்யை எனக்கு முக்தியை கொடுக்ககூடியதுதான். ஆனால் அவ்விடம் பெரிய ஸந்தேஹம் எனக்கு மனதில் உதிக்கிறது. இவ்விதம் பூர்வாபர விசாரணே அநுசரித்து வேதாந்தம் விசாரிக்கப்படுகையில்; ஆத்யாமிக அர்த்தமும் நன்கு தெரிகிறது எனக்கு மற்றவை ப்ரகாசிக்கிறதில்லே. அதை நீர் நிவர்த்தி செய்யும்!

வ்யாசர்— இதை கேட்டதும்; அதிக ரஹஸ்ய வேதாந்த அர்த்தம் அறியவே உன்னுல் கேட்கப்பட்டது. அப்படி இருந்தும் உனக்கு இவ்விடம் சொல்லுகிறேன். எதினுல் நீ பக்தி உள்ளவர்களுக்குள் எனக்கு ச்ரேஷ்டனே? அதினுல் வேதவாக்கியங்கள் ஸர்வமும் ரஹஸ்ய முள்ளது. அதில் ஸந்தேஹமில்லே. அநேக அர்த்தமுள்ள வார்த்தை களுள்ளது. என மஹரிஷிகளால் அதிகம் வ்யாக்யானம் செய்யப்படுகிறது ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் இரண்டும் வேத அர்த்தத்தையே சொல்லு கிறது. ஒன்று அவ்விடத்தில் அபரோக்ஷமாகவும், மற்றொன்று பரோக்ஷ மாகவும் காணும் தேவர்களுக்கு பரோக்ஷார்த்தம் ப்ரியம். மற்றொன்றும் ஆகாது. தேவதேவரது ப்ரஸாதம் எவர்களுக்கு அதிகம் இருக்கிறதோ? அதுதான் அபரோக்ஷம். அதை அறிகிறவர்கள் மாயையால் கொல்லப்பட மாட்டார்கள் கர்மாதி தபஸ் இருந்தும் வித்வான்கள் அறிமாட்டார்கள். வேதம் பரோக்ஷார்த்தம். தேவர்களுக்கு அதிகப்ரியம். இவ்விடத்தில் ஆத் யாத்மிகம் என்ற அர்த்தம் ஸர்வதேஹங்களுக்கும் ப்ரத்யேகமாக உள்ளது. ஆதிபௌதிகம் பரோக்ஷம். அது ஈச்வரப்ரஸாதத்தினுல்தான் அறிகின்ற னர்.

நான் ஈச்வர ப்ரஸாதத்தினுல்தான் இவ்வர்த்தத்தை அறிகிறேன். மற்றொன்று தேவ தேவர் ப்ரஸாதத்தினுல்தான் அறியவேணும். இல்லா விட்டால் அறியமுடியாது.இ வ்வானந்த ஸபாமத்தியில் நிர்த்தனம் செய்கிற ஸபாபதியை தர்சனம் செய்வதால் ஸர்வ ஜந்துகளுக்கும் முக்திகிடைக்கும் என்பதில் ஒருநாளும் ஸந்தேஹமில்லே. இவ்விதம் இவ்வாக்யத்திற்கு அர்த் தம் ஸத்யமாய் சொல்லப்பட்டது ஒருஸமயமும் நீ ஸந்தேஹமடைய வேண்டாம்.

ப்ரம்ஹரந்த்ரத்தில், நெற்றியின் புருவ மத்தியில், காது, கழுத்து,

ப்ரதேசங்களில், ஹ்ருதயத்தில், வயிறு ப்ரதேசத்தில், ஆதாரத்தில், நாபியில் தேஹபாகத்தில், மற்றபாகங்களில் முக்யமாக ஈச்வர உபாஸனையைச் ச்ருதிகள் சொல்லுகின்றன.

ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், இது இரண்டிலும் இந்த அர்த்தம் இருக்கிறது. அப்படி இருந்தும் எல்லா க்ஷேத்திரங்களுள் இந்த க்ஷேத்ரம் மிக்க ஸந்தோஷமாய் உயர்வு உள்ளது. இதைத்தான் ஹ்ருதயம் என சொல்லுகிறது. மற்ற க்ஷேத்ரங்கள்போல் இது இல்லை. தேஹத்தில் ஆத்மா அநுஷ்டானமடைந்து எங்கு இருப்பினும் அது உயர்வே. ஹ்ருதயத்தில் முக்யமாய் இதற்கு ப்ரகாசம். அவ்விதம் வேறு எங்கும் இல்லை நான் என்ற சப்தத்தை குறிக்கும் பெயருடையது ஆத்மா இவ்விடத்தில் தான் உள்ளது என்பதில் ஒருவனுக்கும் விவாதமில்லை.

நான் என்ற சப்தம் சொல்லுகிறவனுக்கு ஸர்வகலைகளிலும், ஹ்ருதயத்தையே நான் என்ற அர்த்தம் குறிப்பாக உள்ளது. அங்குதான் அது இருக்கிறது ஹ்ருதயத்தில் நித்யம் அதிகம் ப்ரகாசிக்கிறது எது என தோன்றுகிறதோ? அது அப்படி வேறு இடத்தில் எங்கும் காணாதது ஹ்ருதயத்தில் மட்டும்தான் விசேஷமாக இருக்கிறது என அறிகிறான்.

ப்ரம்ஹாண்டத்தின்புறமும், உள்ளும் இருந்து ஸ்ரீமத்தப்ரஸபா மத்தியில் சங்கரார்மிக்க ஸாந்நித்யம் கொடுக்கிறார். அவ்விடம் இவ்வீசன் ஸ்வயம்பரமாகவே நித்யம் இருக்கிறார். வேறு க்ஷேத்ரத்தில் இம்மாதிரி இல்லை. ஆகையால் இதை விசேஷமாக சொல்லப்படுகிறது. ஆகையால் எப்பொழுதும் ஈச்வரன் ஆனந்த நிர்த்தனம் இவ்விடத்தில் போல் வேறு இடமும் செய்யவில்லை. ஆகையால் இங்கு வெகுவிசேஷம்.

இவ்வீசனை தரிசனம் செய்வதாலேயே ஸர்வசரீரங்களுக்கும் முக்தி எனச்ருதி ஸாக்ஷாத்தாய் சொல்கிறது. ஆகையால் இது விசேஷமுள்ளது. இது உண்மை, சிவனை தொட்டு பூஜை செய்வதாலேயே முக்தி என உனக்கு என்னால் சொல்லப்படுகிறது. பொய் ஆகுமானால்; க்ஷணிககாலத்தில் எனது தலை விழுந்து விடுக! ஸ்ரீமத்தப்ரஸபாமத்தியில் எப்பொழுதும் ஆனந்த நர்த்தனம் செய்யும் ஈசன் ஸர்வஜந்துக்களுக்கும் தரிசனத்தாலேயே முக்தி ஸித்திக்க செய்கிறார். அவ்விடத்தில் தர்சனம் செய்த மாத்ரத்திலேயே ஸர்வதேஹமுடையவர்களுக்கும் முக்தி கையில்உள்ளது அதில் ஸந்தேகமில்லை. இது உண்மையாக என்னால் சொல்லப்பட்டது ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன் சூத்ரன், சண்டாளன், பதிதன், ஸங்கரன், எவனும் இருந்தாலும் ஸரி ஒருதடவை ஸபாபதியை பார்ப்பானேயாகில் அவன் முக்தி அடைகிறான். அவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை ஆஹிதாக்னி, 4-வேத அத்யயனம் செய்தவன், யோகநிஷ்டன், முனி,

ஸர்வயஜ்ஞங்களில் தீக்ஷை பெற்றவன், வேதாந்தஜ்ஞானமறிந்தவன், இவர்கள் ஸபாநாதரை பார்க்காமல் போனுல் அவன் ஒரு ஸமயமும் ஸம்ஸாரபந்தம் அறுத்தலை அடையமாட்டான். பக்தி உள்ளவனே? பக்தி அற்றவனே? மநுஷ்யன், ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், இவர்கள் யாரேனும் ஸபையில் நர்த்தனம் செய்யும் ஸபாபதியை பார்த்த வுடனேயே முக்தி அடைகிறன் என்பது ஸத்யமாக என்னுல் உனக்கு சொல்லப்பட்டது. இது விஷயத்தில் ஓர் பழமையான இதிஹாஸம் சொல்லுகிறேன் கேள்!

முன்பு ஒரு ப்ராம்ஹணன் பாண்டியன் என்ற துஷ்டபுத்தி உள்ள வன், ஸோமயஜ்வனது பிள்ளை ஸாக்ஷாத் தராசாரரதனுய் ஸதாகாலமும் தகப்பனுரால் நன்கு சிக்ஷிக்கப்பட்டும், அத்துர்மதன் இரவு பகல் ஹேஜை மினி! ஒருஸமயமும் துஷ்ட கார்யத்தினின்று திரும்பவில்லை. ஜ்ஞாதிகள், ஸ்நேஹிதர்கள், வேலைக்காரர்கள், அண்ணன், அப்பா, முதலானேர் வெகுகாலமாக இந்த துஷ்ட சாரமுள்ள துர்மதனை தள்ளியும் வைத்தனர் எல்லா ஜனங்களாலும் தள்ளிய பிறகு அரசனும் அத்தேசத்தினின்று அவனை துரத்தினுன். அவனும் தேசத்தினின்று கிளம்பி பூமியில் அநேக இடங்களில் ஸஞ்சரித்து நடர்களுடனும், காயகர்களுடனும், தூர்த்தர்களு டனும், மற்றுமுள்ள துஷ்டர்களுடனும் சேர்ந்து பணஹேதுவுக்காக அவனுல் ஸ்திரீகள், ப்ராம்ஹணர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்ல வேதவித்துக்கள், ப்ராம்ஹணர்கள், தீக்ஷிதர்கள், மஹாத்மாக்கள், இவர் களது ஸ்திரீகளை மன்மத விகாரத்தினுல் ஏவப்பட்டு அவனுல் தூஷித்தும் அழிக்கப்பட்டது. ஸதாசாரமுள்ள ஸாதுக்கள், நூற்றுக்கணக்கான, ஆயி ரக்கணக்கான, ஜன்மாந்தர புண்யபரிபக்வ காற்றினுல் ஏவப்பட்டு அவர் கள் புண்டரீகபுரமடைந்து யத்ருச்சையாக வஸிக்கையில்; இவனும் ஏஜைமினி! அங்கு வசிக்கலானுன்.

அங்கு ஸபாநாதருக்கு மார்கழி திருவாதிரை உத்ஸவம் ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான கானம், நர்த்தனம் முதலி யன செய்யப்படுகையில்; மிருதங்கம், சங்கம், பேரி முதலிய அநேக வாத்யங்கள் சேர்ந்து ஸ்திரீகள் நர்த்தனம் செய்ய அதன் சிக்ஷையை பார்க்க அவ்விடம் நடர், தூர்த்தர், இவர்களுடன் துர்மதன்சென்றுன் ஆதரவுடன் அங்கு நர்த்தன விசேஷத்தை காண அவர்களையும் பார்க்கி றவனுய் நர்த்தனம் செய்தும் தேவதேவரான ஸபாபதியையும் கண்டான். அவரது நர்த்தனம் முடிந்து ஸ்நேஹிதர்களுடன்கூடி அந்த பாபிஷ்ட னுல் அவ்விடத்தில் ஒரு பாதகமும் செய்யவில்லை. கேவலம் நர்த்தனம் செய்கிற தேவர் தர்சனத்தை பார்த்து பிறகு அப்பொழுதே வெளிச் சென்று மறுபடி வேறு ஓர் ஊர் சென்றுன். அந்த பூமியில் அவன் மற்ற

வர்களுடன் மறுபடியும் ஸஞ்சரித்தான். ஒரு ஸமயம் மஹாகருணையுடைய ஒரு ப்ராம்ஹண ச்ரேஷ்டனால் அவனை நீ யார்? என கேட்டதிற்கு அவரிடம் முழுமையும் தன் வ்ருத்தாந்தங்களை வர்ணித்தான். அவரும் க்ருபையுடன் கேட்டு அவனுக்கு இப்புத்தியை கொடுத்தார்.

ப்ராம்ஹணன்:— அடே துர்மத! துர்புத்தி!! உன்னால் பெரிய பாபங்கள் செய்யப்பட்டுள்ளது. அநேக கல்பகோடி வர்ஷம் நரகத்தில் உனக்கு வாஸம் நிச்சயம் உண்டு. அதை நினைத்து, நினைத்து கர்மாவினால் பீதி அடைந்து; எனது மனதில் உனது பாபசாந்திக்கு உபாயம் நான் சொல்லுகிறேன் ப்ராயசித்தம் செய்யப்படுமாகில்; பாபம் நிஷ்பலமாகும் என எண்ணுகிறேன். ஆகையால் அதன் சாந்திக்கு குழந்தாய்! பரிகாரம் அநுஷ்டிப்பாயாக! எது என்னை குறித்து கேட்கப்பட்டதோ? அதை உனக்கு நான் ப்ராயச்சித்த உருவமாய் சொல்லுகிறேன். கேட்காதவனுக்கு சொல்லக்கூடாது என வேதாநுசாஸன வாக்கியம் உள்ளது.

வ்யாசர்:— இவ்விதம் ப்ராம்ஹணனை பார்த்து ஆக்ஷேபித்து சிரித்து இவ்வார்த்தையை துர்மதன் சொன்னான்.

ப்ராம்ஹணன்:— ப்ராம்ஹணனே! தர்மாதர்ம கதைகள் புத்தி இல்லாதவர்களால் கற்பிக்கப்பட்டது! உன்னைப்போல் உள்ளவர்களுக்கோ? எனில்; அவ்விடம் விச்வாஸம் இருக்கலாம். என்னைப் போன்று உள்ளவனுக்கு இருக்காது தனது ஸம்ஸாரத்தை புணர்வதில் பாபம். ஸர்வ தேஹங்களுக்கும் பின்பு ப்ரத்யக்ஷமாக காண்கிறதோ?

வ்யாசர்:— இது முதலியன சிரிப்புடன் பேத்தல் செய்கிறவனாக ப்ராம்ஹணனை மிரட்டுகிறவனாக வந்த வழியே மூர்க்காள், தூர்த்தாள், இவர்களுடன் முனியே! அவன் சென்றான். துராத்மா துர்மதனுக்கு என்னால் எவ்வளவு போதனை செய்தும் கஷ்டபுத்தி துஷ்ட சேர்க்கையால் துர்மதிக்கு திரும்பவில்லை பச்சாதாபமில்லாமல் உள்ள பாபிஷ்டனான துராத்மாவுக்கு அதிக துக்கத்துடன் வெளிகதி இருக்கிறது என்பது வேறில்லை என நினைத்து நினைத்து; மஹாகருணையுடைய ப்ராம்ஹணன் பெரிய க்ருபையுடன் முனியே! பிறகு தன் ஆச்ரமமடைந்தார்.

ஸ்ரீமத்தப்ரஸபாநாதரது தாமரை போன்ற பாததர்சனத்தால் ஜீவன் முக்தனாக ஆகலாம் என ப்ராம்ஹணன் துர்மதன் அறியவில்லையல்லவா? அவனும் பெரிய காலத்தில் முனியே! துர்மதன் விந்திய பர்வதஅடியில் கடைசியாக பெரிய ஸர்பத்தினால் கடித்து உடனேயே இறந்துபோனான். பிறகு அவனை பயங்கரர்களான யமதூதர்கள் கயிர்களால் கட்டினார்கள். ரொம்பவும் கோபமடைந்தவர்களாக யமபட்டிணத்திற்கு அழைத்துசெல்ல இழுத்து சென்றனர். அப்பொழுது அங்கு மூன்று சூலமுடையவர்களாய்,

விபூதி அணிந்தவர்களாய், சாந்தமுடையவர்களாய், நந்தியால் ஏவப்பட்டவர்களாய், உள்ள சிவதூதர்கள் நேரில் வந்தனர். சிலர் வேகமாக தூமர் மதனை பாசகயிர்களை விடுத்து அழகிய விமானத்தில் ஏற்றி சிவலோகத்திற்கு கொண்டு சேர்த்தனர் அதிக கோபமடைந்த சிவதூதர்கள் சில யமதூதர்களை சூலத்தால், கால், கை, முதலிய பாகங்களில் குத்தி அடித்தனர். ரத்தம் விடுகிற சரீரத்துடன் கால், கை, போனவர்களாக சிவதூதர்களால் விடுபட்டவர்களாக யமபட்டணம் சென்றனர்.

தனது கர்மாக்களை யமராஜனிடம் அப்படர்கள் தெரிவித்தனர் அவனும் ஆச்சரியமடைந்தவனாகி கோபம், பயம், இவை அடைந்தவனாகி சிவபக்தர்கள் என்னை அறியாமல் எனது படர்களால் கட்டப்பட்டதை ஏன் அவிழ்த்தனர்? என நிச்சயித்து சித்ரகுப்தனை சேர்ந்த மற்றவர்களையும் சபையில் யமன் கூப்பிட்டு இந்த தூர்மதனுடைய புண்ய, பாப, விசாரணைக்காக முனியே! அநேக விதமாக ஏவியும், நினைத்தும், அடிக்கடி விசாரித்து, தர்மராஜரிடம் அவனதுகர்மாவை நிச்சயித்து தெரிவித்தனர் இந்த ஜன்மாவில்; தேசாந்தரம் போகப் பணம் முதலிய சுச்ரூஷை செய்கிறவர். ஸ்ரீமத்வ்யாக்ரபுரேசரை மநுஷ்யர்கள் பார்த்து வேறிடம் ஆசையால் வஸித்தாலும் அம்மநுஷ்யர்கள் சிவனுக்கு இஷ்டமுள்ளவர்கள். இம்மஹா க்ஷேத்ரத்தில் பக்தியினாலோ? பக்தி இல்லாமலோ? இறந்து போனாலும் ஸதா எவர்கள் இந்த உயர்ந்த க்ஷேத்ரத்தில் பாபமில்லாமல் வஸிக்கிறார்களோ? அவர்கள் அவர் பாதாம்புஜத்தில் பக்தியும், சிவபக்தர்களை அர்ச்சிப்பதிலும், ஆசையுள்ளவர்கள்.

தேவதேவரை நமஸ்கரித்து பக்தியுடன் எவன் ஸாப்பிடுகிறானோ? அவன் சிவசப்த ஜபத்யானத்தால் அவனது பாபக்கூட்டம் த்வம்ஸம் செய்யப்பட்டதாகிறது. இந்த க்ஷேத்ரச்ரேஷ்டத்தில் வஸிக்கிறவர்கள் வேதாந்த ஜ்ஞானபரர்கள். எல்லோர்களிலும் உத்தமோத்தமர்கள், இது ஸத்யமாக உன்னால் சொல்லப்பட்டது. சொல்வதில் ஸந்தேஹமில்லை. இது முழுமையும் உண்மையாக கட்டாயம் அநுஷ்டிக்க வேண்டியது. என உன்படர்களுக்குச் சொல். புண்டரீகபுரத்தில், வர்ணம், ஆச்ரமம், எல்லாம் அவ்விதமே உள்ளது என அறி.

அங்கே நாய் சமைத்து சாப்பிடுகிறவன், பதிதன், பாஷண்டன், ஸங்கரன், மநுஷ்யன், பசு, புழு. பூச்சி, பாம்பு, ஒட்டகம், பன்றி, கழுதை, மரம், செடி, கொடி, ஓஷதி, ப்ராணிகள், ஸ்தாவரம், ஜங்கமம் இவைகள் பாபியாய் இருப்பினும், உன்னால் தள்ள வேண்டியது. அவை எல்லாம் சிவரூபம், உன்னால் அதையும் நமஸ்காரம் செய்ய வேண்டியது. என்னால் உனக்கு இவை சொல்லப்பட்டது. நித்யம் உங்கள் படர்களாலும், உன்னாலும் நமஸ்காரம் செய்யவேண்டும். நீயும்

என்னால் சொல்லியது, முழுமையும் அறிந்து, உங்கள் தூதர்களை இனி அடங்கி இருக்கச்செய்.

என நந்தியால் ஆஜ்ஞாபிக்கப்பட்டதும், ஈசபக்தன் தர்மதனை வணங்கி யமன், தன்படர்களை அழைத்துக்கொண்டு தேவகணங்களையும் வணங்கி அவ்விடத்திலிருந்து பயமின்றி தன் பட்டணம் அடைந்தான்.

ஜைமினி :— இவ்விஷயம் என்னால் உனக்குச் சொல்லப்பட்டது. இது முன் நடந்த தர்மதன் விஷயம். அதிரஹஸ்யமுள்ளது. ஈசனை, எவன் ஒரு தடவை பார்க்கிறானோ? அவன் உடனே முக்தி அடைகிறான் என்பது உனக்கு விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. இது உண்மை.

இரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

வ்யாஸர் :— எந்த மநுஷ்யர்கள் அவ்விடம் ஈசனைப் பாராமல் இறந்து போனாலும், அவர்கள் உடனேயே முக்தி அடைகின்றனர். அது விஷயத்தில் ஸந்தேஹமே இல்லை. இவ்விதத்தில் உனக்கு துஸ்ஸஹன் சரித்திரம் ஒன்றும் சொல்லுகிறேன். இதற்குமுன் யாருக்கும் இது சொல்லியதில்லை. நான் உனக்கு அதிரஹஸ்யமாய் உள்ளதைச் சுருக்கமாகச்சொல்லுகிறேன்.

முன்பு துஸ்ஸஹன் எனப்பெயருடைய வேடன் அதிகடுமையான பாபங்கள் செய்தவனாய் இருந்தான். அவன் ஸஹ்யபர்வத அடியில் வழிப்போக்கர்களைக் கொன்று அதிகபணம் அபஹரித்தான். ஒருஸமயம் அவன் ப்ராம்ஹண வேஷம் கொண்டு பணக்கார ப்ராம்ஹணர் வீடுகளிலும் ப்ரவேசித்து, அதிதிவேளையில் ப்ராம்ஹணர்களால்நன்குபூஜிக்கப்பட்டான். செய்த அதிதி ஸத்காரணங்களால் இளைப்பாறி பிறகு நடுநிசி சமயத்தில் அவ்விடத்தில் உள்ள எல்லாப்பணத்தையும் கொள்ளை அடித்துப், பிறகு வேறு ரூபமாகவும் சென்றுவந்தான்.

இப்படி இருக்கையில்; ஒருநாள் வ்ரதம் உள்ள ஸந்யாசி வேஷம் போலும், ராஜம் போலும், வ்ருஷணன் போலும், இவ்விதம் இருந்து வந்தான். வெகுகாலம் சென்று, அவ்விடத்தில் கேரளதேச அரசன்

ஒருவன் மஹாப்ரகாசனுயிருந்துவந்தான். அவன் மஹா பக்தி உள்ளவன். தேவதேவன் ஸபாபதிக்கும் ப்ரியமுள்ளவன். அவன் ஒருசமயம் ஸ்வர்ண ஸபையில் ந்ருத்தனம் செய்யும் ஸபாபதியே; போகமோக்ஷபலம் கொடுக்கக்கூடியவர் என்றும், பார்த்த மாத்ரத்தினுலேயே எல்லோருக்கும் க்ஷேமம் என்றும், கேள்விப்பட்டுப் பார்க்க ஆசைஉடையவனுகி, அவ்வரசன் தனது பட்டணத்தினின்று வெளிக்கிளம்பிச் செல்லுகிறவனுக எவ்வளவு காலத்திற்குள் ஸஹ்ய பர்வதமடைந்தாரோ? அவ்வளவு காலத்திற்குள், அவ்வரசன் வேடனுன துஸ்ஸஹனுக்குத் தென்பட்டான். உடனே அவன் வெளிக்கிளம்பி, சூத்ர உருவத்துடன் பணம் அபஹரிக்கும் புத்தி உடையவனுகி மறைத்த உருவத்துடன் ராஜகீய பட்டர்களுடன், பாரத்தைதாங்குகிறவன்போல், ஏவப்பட்டு, தானும் வேலைசெய்பவன்போல் நடித்துவருகையில், ஒருசமயம் அவன்எண்ணினுன். நான்பாரம்வஹிக்காமல்போனுல் என்னை அதிகமாகஅடிக்கப்போகிருர்கள். ஆகையால் பாரம்வஹிக்கிறேன். கொஞ்சம் இவர்களை ஏமாற்றி ஸர்வபணத்தையும் எடுத்துப் போகிறேன் என நிச்சயமடைந்து, ப்ரீதியுடன் பணநிமித்தமாக துஸ்ஸஹன் சேர்ந்து தூக்கிவந்தான். இடுக்கு ஏற்பட்டபொழுது ஓட, அவன் எதிர்பார்த்திருந்தான். ஆனுல் அங்கு முடியவில்லை. அநேக ஜன்மாக்களில் செய்த புண்யக்கூட்டத்தினுல் தனதுபட்டர்கள் அரசன் எல்லோருமாக புண்டரீகபுரம் அடைந்தனர்.

ராஜக்ருஹமடைந்து, துஸ்ஸஹன் பாரங்களை வைத்தான். உடனே அவனுக்குப் பெரியஜ்வரம் ஏற்பட்டு அங்கேயேஇறந்துபோனுன். அவனும் ஈசனைப் பாராமல் மரணமடைந்த மாத்ரத்தில், பாபஷ்டனுய் இருந்தபோதிலும் மோக்ஷமடைந்தான். இது உண்மையாகச் சொல்லப்பட்டது இந்த க்ஷேத்ரத்தில் அநேகர்கள் மரண மாத்ரத்திலேயே, கேவலம் ஸபநாதரைப் பாராமலேயே மோக்ஷமடைந்திருக்கின்றனர். பலர் இந்தப் புண்டரீகபுரம் என்ற ஸர்வக்ஷேத்ர உத்தமோத்தமபூமியில், ஜலத்தில், மரப்பொந்தில், ஆகாசத்தில், ஜந்துக்கள் இறப்பினும் உடனேயே முக்தி அடைகின்றனர். அதில் சந்தேஹமில்லை.

முன்பு ஒரு ச்யேனப்பக்ஷி ஸமுத்திரத்தினின்று மீனை ப்ராணனுடன் எடுத்து புண்டரீகபுரமடைகையில் ஒரு வ்ருக்ஷக்கிளை நுனியில் சாப்பிடுகையில் மூக்கு நுனி துண்டம் ஆகி ப்ராணனை விட்டது. மீன்சரீரம்அது விட்ட உடனே முக்தி அடைந்தது. ஜலத்தில் இறந்த ஜந்துக்களும் அநேகம் முக்தி அடைந்துள்ளது. இவ்விடம் ஜலத்திலுள்ள மீனும், பூமியில் இறந்தாலும், அநேகம் ஆகாசத்திலே இறந்தாலும், ஈசனைக்காணுமலேயே முக்தி அடைந்தன என உனக்கு என்னுல் உண்மையாக சொல்லப்பட்டது.

தர்சனம் செய்தாலும், மரணமடைந்தாலும், இந்த க்ஷேத்ரம் முக்தி அளிக்கக் கூடியது எனச்சொல்லப்பட்டது. மற்றக்ஷேத்ரங்கள் இம்மாதிரி இல்லே. ஆகவும் முடியாது. அதனுலேயே விசேஷமாகச் சொல்லப் படுகிறது.

விராட் ஹ்ருதயம் எனப் புண்டரீகத்தை ச்ருதி சொல்லிற்று. ரொம் பவும் ப்ரீதியுடைய ஹ்ருதயத்தில் தேஹம் ஸர்வபுஷ்டி உடையது. உப சாரமில்லாமலே, இவ்விடத்தில் ஒரு ஆக்ஷேபணையும் வேண்டாம். ப்ரீதி இல்லா தேஹத்திலும், நல்ல புண்யம் உண்டாகிறது. ப்ரத்யக்ஷமாக ஸர்வ தேஹமுடையவர்களுக்கும், வேறு எங்கும் திருப்திஉண்டாகாது. ஸபா நாதர் நன்கு பூஜிக்கப்படுவாரேயாகில்; எல்லா இடமும் பூஜித்ததாக ஆகும். அதுவிஷயத்தில் ஸந்தேஹமில்லே. எல்லா இடத்திலும் மஹாதேவன் பூஜிக்கப்பட்டதாக ஆனுலும், ஸபேசனேப் பூசிக்காமல்போனுல் ஒருநாளும் த்ருப்தி அடையமாட்டார். இவ்விடம் எவன் நித்யம் ஸபாநாதனேப் பக்தியால் பார்க்கிருனே? அவன் ஸர்வக்ஷேத்ரங்களிலும், ஈசனே நித்யம் ஸேவித்தவனுகிருன். இவ்விடத்தில் தேவனேப் பாராமல் மநுஷ்யன் எங்கு சுற்றினுலும் அதினுல் பரமேச்வரனேப் பூஜித்ததாகாது. கண் முத லான இந்த்ரியங்கள் ஹ்ருதயமில்லாமல் உருவங்களேப் பார்க்கமுடியாதோ? அதுபோல் இவ்விஷயத்தில் விவாதம் தேவையில்லே. இந்த்ரியமில்லாமல் தன் அர்த்தத்தை மனஸ்க்ருஹிக்கிறது. அதுபற்றி சந்தேஹமில்லே. அவ் விதமே புண்டரீகம் என்ற பெயரிய க்ஷேத்ரத்தில், இருக்கிற ஸபாபதி தர்சனமின்றி, மநுஷ்யனுக்கு வேறு க்ஷேத்ரத்தில் உள்ள தேவர்கள், முக்தியை ஒரு ஸமயமும் கொடுக்கமாட்டார்கள். இது நிச்சயம். ஸேவிக் காமல் மற்ற க்ஷேத்ரங்கள் இருப்பினும் மநுஷ்யனுக்கு ஸபாபதி தர்சனத் தினுலேயே ஈசன் முக்தியைக் கொடுக்கிருர். ஸர்வ க்ஷேத்ரபலமும் அம் மநுஷ்யர்களுக்கு உண்டு. அநாயாசமாக ஸபாபதியின் தர்சனம் ஸாதிக்கும். தேவதேவர் தர்சனம் மற்ருென்றுக்கு ஒருஸமயமும் விசேஷமில்லே. தேவ ருக்கு ஸமமாக க்ஷேத்ரங்களில் உள்ள தேவதைகளும் ஸமம், இதற்கு ஸமம் வேறு ஆகாது.

தபஸ், அத்யயனம், யஜ்ஞம், தர்மம் முதலியன எது இருந்தாலும் சித்ஸபாநாதர் தர்சனத்தினுலேயே எல்லாம் ஸாதிக்கப்படுகிறது. இது ஸத்யமாக சொல்லப்பட்டது. ப்ராம்ஹணர்களால் செய்யப்படும் தபஸ் முதலிய கர்மாக்களால் ஸாதிக்கமுடியாது. பலமும் கிட்டாது. தேவேசரது கார்யங்கள் அவ்விதம் உயர்வு. எப்பொழுது கீர்த்தனம் செய்யும் ஸபாபதி தேவரைப்பார்க்கிருனே? அப்பொழுது அவனுக்கு கர்மாக்கள் ஸபலமுள்ள தாகும். அதைப்பற்றி வேறு ஒன்றுமில்லே.

இவ்விடமிருந்து தேவதேவர் ஸபாபதியைப் பார்த்து, விச்வாசமின்றி வேறு க்ஷேத்ரமடைவானேயாகில், அவனுக்கு அவ்விடம் தேவரை பக்தியால் பூஜித்து, மரணமடைந்தாலும், ஸம்ஸாரத்தினின்று அவனுக்குமுக்தி இல்லை. ஸபாபதிக்கும்த்வேஷ காரணமாகிறான். எவ்விதம் தூங்குகையில் இந்த்ரியங்கள் எல்லாம் ஹ்ருதயத்தில் ஒடுங்குகிறதோ? அவ்விதமே எல்லா க்ஷேத்ரங்களும், புண்டரீகபுரத்தில் லயமடைகிறது.

ஜைமினி:— தேவதேவர் ஸாக்ஷாத்தாக க்ஷேத்ரஉருவமாக அங்கு இருக்கிறார். இவருக்கு ஒருஸமயமும் வேறு லயமடையும் தன்மைஇல்லை. இது ஸத்யமாக உனக்குச் சொல்லப்பட்டது. ஆகையால் இதற்கு ஸமானம் மற்ற க்ஷேத்ரம் இருப்பதாக ஆகிறதில்லை. இம்மாதிரியும் கிடையாது. அதினால் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. மற்றக்ஷேத்ரத்தில் உள்ள தேவர்கள் நடுஜாமத்தில் புண்டரீகபுரத்தில் ஸேவைக்கு வருகின்றனர்.

விசேஷமாக அங்கு உள்ளது. ஸபாநாதர் ஒரு இடமும், ஒருஸமயமும் ப்ரகாசிக்கமாட்டார். ஸர்வ தேவஸ்வரூபரானபடியால் அந்த க்ஷேத்ரம் உத்தமம். அக்காரணம் பற்றி மஹாதேவச்ரேஷ்டர் என்று ச்ருதியும் சொல்லுகிறது. அவ்விதமே இந்த க்ஷேத்ரம் ஸர்வ க்ஷேத்ரத்திலும் ச்ரேஷ்டம்என சித்தாந்தம் மஹாதேவரைக்காட்டிலும், ஒருதேவர் ஸமமாக எப்படி ஆகமுடியும்? ஆகவே முடியாது. அவ்விதமே அதற்கு ஸமமான க்ஷேத்ரமும் அதிகமாக ஒரு இடமும் கிடையாது. மஹா தேவருக்கு ஸமான தேவரும், வேறு ஒன்று உண்டு எனச்சொல்லி எவன் விடுவான்? அவ்விதமே அதற்கு ஸமான க்ஷேத்ரம் இதுவே எனச் சொல்லிவிடுவான் ஸர்வமார்க்கங்களிலும், வேதமார்க்கம் எப்படி உயர்வோ? முக்தி ஸாதன மார்க்கத்தில் விபூதி எப்படி உயர்வோ? சிவனுக்கு ப்ரீதிகரம் உள்ள பக்தர்களது பூஜை எவ்விதம் உயர்வோ? ஸர்வ மந்த்ரங்களுள் மந்த்ர ராஜா ஆறு அக்ஷரம் எவ்விதமோ? ஸர்வ பாபங்களைத் துலைப்பதில் ருத்ராக்ஷ தாரணம் எப்படி உயர்வோ? ஸர்வ தேவர்களுள் சிவலிங்கார்ச்சனை எப்படி உயர்வோ? ஸர்வ வேத மந்த்ரங்களுள் சதருத்ரீயம் எப்படி உயர்வோ? ஸர்வ வர்ணங்களுள் ப்ராம்ஹணன் எப்படி உயர்வோ? ஆச்ரமங்களுள் நான்காவது ஆச்ரமும் உயர்வு என எவ்விதம் ச்ருதி சொல்லுகிறதோ? ஸர்வ தர்மங்களுள் அஹிம்ஸை எவ்விதம் உயர்வோ? ஹிதம் செய்பவர்களுள் குரு எப்படி உயர்வோ? எவ்விதம் ஸர்வவித்யைகளில் சிவவித்தை உயர்வோ? இவ்விதம் அதிகமாகச் சொல்லி போதும்; இது ஸர்வக்ஷேத்ரங்களுள் உயர்வுதான்.

வ்யாஸர்:- இதற்குஸமானமாகவோ, அதிகமாகவோ, ஒன்றுமில்லை.

இது ஸத்யமாக என்னால் சொல்லப்பட்டது. இந்தக்ஷேத்ரத்தைக்காட்டிலும் அதிகம் இருக்கிறதாக எவன் சொல்லுகிறானே? அவனுடன் மநுஷ்யன் பேசினாலும் பாபமடைகிறான். நிச்சயம் படித்தாலும், சாஸ்த்ரங்களைச் சொன்னாலும் விசேஷம் இதற்கு ஸமானமாக எதுவும் சொல்லமுடியாது. இதற்கு உற்பத்தி சேர்க்கை இல்லை என்பதில் ஸந்தேஹமில்லை. இந்த தேவரைப் பார்த்ததினாலேயே யோக க்ஷேமங்கள் வேறு ஒன்றுமில்லை.

இந்த தேவரைப் பாராமல் யோக க்ஷேமங்கள் ஸித்திக்காது. மற்றவை முழுமையும், மநுஷ்யர்களுக்கு மோஹத்திற்கே கேவலம் உள்ளது ஆகவே எல்லாம் விட்டு லோகத்திற்கு மோஹன சக்தியுடைய புண்டரீக புரத்தை அடை. மநுஷ்யர்களுக்கு தர்சனம் செய்வதாலேயே, முக்தி அளிக்கவல்லது. முக்தி நியமத்தால், நித்யம் இந்த்ரிய நிக்ரஹத்துடன் ஸபையில் நிர்த்தனம் செய்யும் பரப்ரம்ஹ தர்சனத்தாலேயே, நீ மோக்ஷமடையப் போகிறாய். அதில் ஸந்தேகமில்லை. என்னால் சொல்லியஎல்லா அர்த்தங்களும் ஸர்வவேதாந்த ரஹஸ்யம். பரமேச்வர பக்தனான உனக்குச் சொல்லிய எனது மதத்தில் இவ்வர்த்தகத்தில் ஒருபொழுதும் நீ ஸந்தேஹிக்கவேண்டாம், எவன் ஸந்தேஹிக்கிறானே? அவன் அறியாமையால் அதிகக் கொடுமையுள்ள ரௌரவம் என்ற நரகம் அடைகிறான். இது நிச்சயம்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.

ஜைமினி:- உம்மால் சொல்லியது ச்ருதி சிரஸில் உள்ளது. குருவினிடம் நெருங்கியவர்களுக்கே க்ருபையால் ரஹஸ்யம்சொல்லப்படுகிறது உம் விஷயத்தில் எனக்கு ஸந்தேஹமில்லை. குரு சொன்னவிஷயத்தில் மநுஷ்யன் ஸந்தேஹமடைவானேயாகில்; அவன் கீழேதள்ளப்படுகிறான். நித்யம் நியமத்துடன் வ்யாக்ரபுரத்தில் வஸித்துக்கொண்டு, உம்மால் சொல்லிய நியமம் எவன் செய்கிறானே? அவன் எந்த நிலையில் இருக்கவேணும் என்பதையும் சொல்லவேணும்.

வ்யாஸர்:— தன் வீட்டிலிருந்து வ்யாக்ரபுரத்திற்குச் செல்லுதல் என யாத்திரை நிச்சம் செய்து ஈசனைப் பூஜித்து ப்ராம்ஹணர்களை ஸமாப்பிடச்செய்து அவர்களால் ஆஜ்ஞாபிக்க ப்ரார்த்தித்து, பக்தியுடன்

வெளியில் செல்வானே யாகில் போகும் இடத்தில் பரான்னம் தள்ளி, தானம் வாங்குவதைத் தள்ளி, காமக்ரோத தோஷங்களை விசேஷமாகத் தள்ளி, ஸர்வ க்ஷேத்ரச்ரேஷ்டமான புண்டரீக புரமடைந்து, உபவாஸம் செய்யநல்லதினத்தில் க்ஷவரம் செய்துகொண்டு, பின்பு ஸர்வதீர்த்தங்கள் ஸேவிக்கும் சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானம் விதியுடன் செய்து, த்ரியம்பக தேவரைத்யானம் செய்து, ஹிரண்ய ச்ரார்த்தம் செய்து விதிப்ரகாரம் பிண்டப்ரதானம் செய்து, அக்ஷயத்திருப்தி அடைய பித்ருக்களுக்கு அஹங்காரமின்றி செய்து முடிந்தவரை, தன, தான்ய, வஸ்த்ர, அன்னம், பூமி, பவுன், பசு, கன்யகை, முதலியன த்ரவியத்தோடு சேர்ந்து, சிவபக்தர்களுக்கும், ப்ராம்ஹணர்களுக்கும் விசேஷமாய்க் கொடுத்து, ஸ்ரீமத் பஞ்சாக்ஷர மந்த்ரம், 108 தடவை ஜபித்து மறுபடி ஸ்ரீ மூலஸ்தானேசரை பக்தியால் பூமியில் மூன்றுதடவை நமஸ்கரித்து மூன்றுதடவை ப்ரதக்ஷிணம் செய்து, ஐந்து நமஸ்காரம் செய்து, மறுபடி தேவரை பக்தியுடன் பார்ப்பானே யாகில் அங்கு, வஸ்த்ரம், பூமி, திவ்ய ஆபரணங்கள், தொண்டுசெய்யும் தன்மை, இவைகளைச்செய்துகொடுத்து தூப, தீபம், உபகாரம், முதலிய மஹா நைவேத்யங்களையும் கொடுத்து, தேவிக்கு தனது ஆத்மசக்தியை அநுசரித்து, அணுமாத்ரமாகக் கொடுத்து ஈசனுக்குநமஸ்காரம் செய்வானேயாகில்; பரமேச்வரனுக்கோாயகனுகிறன் அன்றி வேறில்லை.

பணமில்லா மநுஷ்யன், பத்ரம், புஷ்பம், பலம் முதலியவைகளை ஈசனை நமஸ்கரித்துக் கொடுப்பானுகில், ஒருஸமயமும் வேறுவிதம் ஆக மாட்டான். தேவாலய நிர்மால்யம், புல், அசுத்தி இவைகளை நன்குசுத்தம் செய்து, தேவேசரைப் பார்ப்பானேயாகில்; வேறுவிதமாக ஆகமாட்டான், ஒன்றும் இல்லாமல் போனுல், வாக்ஸகாயம் செய்தாலும்ஸரி, அவன் ஈசனை நமஸ்கரித்துச் செய்வானேயாகில்; பரமேச்வா பக்தனேயன்றி, வேறில்லை என வேதாநுசாஸனம் கூறுகிறது.

இவ்விதம் முடிந்தவரை பக்தியுடன் செய்து தேவரைப்பார்ப்பானே யாகில் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்த்ரம் 108-தடவை ஜபிப்பானேயாகில்; மறுபடி மூன்று தடவை ப்ரதக்ஷிணம் செய்து, நமஸ்கரிப்பானேயாகில், பக்தியுடன் சித்ஸபாமத்தியில் நிர்த்தனம் செய்கிற தேவரைப்பார்ப்பானே யாகில்; பார்த்து ஆறு அக்ஷரமந்த்ரத்தை முடிந்தவரை மநுஷ்யன் ஜபிப்பானேயாகில்; சிவகங்கையில் ஸ்நானம்செய்து 108-தடவை ஜபிப்பானே யாகில்; தப்ரஸபாநாதரை பார்ப்பானேயாகில்; அவனுக்குப் புனர்ஜன்மா உண்டாகாது. அவ்விடம் ராத்ரி இருந்து விடியற்காலை இந்த்ரிய நிக்ரஹத்துடன் ஸ்நானம் செய்து ஸ்வர்ண தானம் செய்வானேயாகில்; தேவரான ஸபாபதியைப் பார்த்து அவ்விடம் சிவபக்த ப்ராம்ஹணர்

களுக்கு விசேஷமாகக் கொடுப்பானேயாகில்; மறுபடியும் அவர்களால் ஆஜ்ஞைசெய்து மனதிற்கு இஷ்டமான்னதை சாப்பிடுவானேயாகில்; மூன்று நாளோ, ஐந்துநாளோ, ஒரு பக்ஷமோ, ஒரு மாதமோ, ஒரு வருஷமோ, வஸிப்பானேயாகில்; ப்ராணம் போகிற காலம்வரை பக்தியாய் இருந்து நித்யம் ஒருபிடி அன்னம் சிவபக்தி உள்ளவனுக்கு பிக்ஷையாகக்கொடுப் பானேயாகில்; அந்தவீடு சூன்யமாகிறதில்லை. ப்ராம்ஹணர்களுக்கு ஒரு பிடிகூட கொடுக்காமல், தானே சாப்பிடுவானேயாகில் வீட்டில் இருக் கிறவன் பாபத்தைச் செய்கிறான். ஸந்தேஹமில்லை. ஸபாபதியை நித்ய மாகப்பார்த்துக்கொண்டு வ்யாக்ரபுரத்தில்வஸிப்பானேயாகில்; அவனுக்கும் உனக்கும் நியமம் சொல்லப்பட்டது.

இதை நீசெய், விடியற்காலம் எழுந்து வ்யாக்ரபுரத்தைக் குறித்துப் புறப்படப் போகிறேன் என ஒருதடவைசொல்; அன்றையதினம் வரை உள்ள பாபங்கள் உனக்கு விடுபடுகிறது. யாத்ரை ஸங்கல்பம் செய்த மாத்ரத்திலேயே, புருஷனுக்கு இந்த ஜன்மாவில் யாத்ராகாரணமாக, புத்தி பூர்வக அஞ்ஞான பாபம் நாசமடைகிறது, தர்சனம்செய்த மாத்ரத் திலேயே பாபங்கள் தொலைந்து மநுஷ்யனுக்கு முக்தியும் அடைவிக்கிறது. ஜன்மாந்த்ரத்தில் செய்தது கூட தொலைகிறது. ஸந்தேஹமில்லை. க்ஷேத் ரத்தில் ப்ரவேசித்த மாத்ரத்திலேயே ஜன்மாந்த்ரத்தில் செய்த பாபங்களும் புத்தி பூர்வமாக உள்ளதும் மநுஷ்யனுக்கு நசிக்கிறது. இது பார்த்ததினாலேயே, கிடைக்கும்.

சிவகங்கை தர்சனம் செய்தலால் ப்ரம்ஹலோகமடைகிறான். தொட் டதினால் ப்ரம்ஹலோகம். பூஜை செய்தலால் ருத்ரலோகம். இவைகளைக் கட்டாயம் அடைகிறான். சிவகங்கையில் ஸ்நானம் செய்தமாத்திரத்தி னாலேயே, ஈச்வரபதமடையும் தன்மை. ஸ்ரீ மூலஸ்தானநாதர் தர்சனத் தால் ஸதாசிவனாக ஆகிறான். சித்ஸபை மத்தியில் ந்ருத்தனம் செய்கிற, பரப்ரும்ஹத்தை பார்த்த மாத்திரத்தினாலேயே முக்தி அடையப்படுகிறது, இதில்ஸந்தேஹமில்லை. சிவபக்தியுள்ளவன்எப்பொழுதும்ஜ்ஞானாப்பியாசம் செய்கிறவன், நித்யம்தனது தர்மத்தில் ஒழுங்குடையவன், பாபகர்மாவிலி ருந்து திரும்புகிறான். ஸாக்ஷாத் தப்ரஸபா நாதரைப் பார்த்து வருவா னாகில் முக்தி அடைகிறான். தேவ தேவனை தர்சனம் செய்த மாத்ரத் லேயே ஸாலோக்யம் முதலிய முக்தி க்ரமாகக் கிடைக்கிறது, அது பற்றி சந்தேஹமில்லை. வேறு இடத்தில் பாபங்கள் செய்த போதிலும் மநுஷ்யர்கள் இந்த க்ஷேத்ரச்ரேஷ்டத்தில் மரணமடைவார்களானால் அவர்களுக்கும் மோக்ஷமே ஸந்தேஹமில்லை. இவ்விடம் பாபம் செய்யா மல் வஸித்து வேறிடத்தில் தேவேச்வரரை எவர் நித்யம் பார்க்கிறார் களோ? மரணமடைகிறார்களோ? அவர்கள் உடனே ஸாயுஜ்ய ரூப

முத்தியை அடைகின்றனர். வேறு ஸந்தேஹமில்லை நித்யம் தேவரைப் பாராமல் வஸித்தாலும், இறந்தபோதிலும், உடனே ஸாலோக முக்தி அடைந்து வரிசைக்ரமாக ஸாயுஜ்ய முக்தியும் அடைகின்றனர்.

இவ்விடம் பாபம் செய்து இருக்கிறவர்கள் கோரமான கஷ்டம் தான் அடைய வேண்டும் அதில் ஸந்தேஹமில்லை.

ஜைமினி :—ஸ்ரீமத்தப்ரஸபாமத்தியில் ந்ருத்தனம் செய்யும் ஈசன் தர்சனத்தினாலேயே எல்லோருக்கும் முக்தி அடைவிக்கிறார். ச்ருதி ஸ்ம்ருதி, புராணம், ஆகமம். இவைகள் இவ்வர்த்தத்தையே நித்யம் கோஷம் செய்கின்றன. ஸந்தேஹமில்லை. நித்யம் இவ்விடம் வஸிக்கிற பாபிகளுக்கும், க்ஷேத்ரச்ரேஷ்டங்களில் உள்ள பாப புத்தியே, சொல்லப்பட்டது. உம்மால் இது விஷயம் சொல்லியது விரோதமாய் எனக்குத்தெரிகிறது. இவ்விடம் பெரிய ஸந்தேஹம் எனக்கு மனதில் இருக்கிறது. இந்த த்ருடதர ஸந்தேஹத்தை அறும்.

வ்யாஸர் :— இவ்விஷயம் நீ கேட்டது அதிரஹஸ்ய முள்ளது அப்படி இருந்தும் பக்தி உள்ள உனக்கு நான் சொல்லுகிறேன்.கேள்.

முனியே! இவ்விடம் அநேக பாபம்செய்த மநுஷ்யர்களும், ஜ்ஞானத்தாலோ, அஜ்ஞானத்தாலோ, யமனால் தண்டிக்கப்பட மாட்டார்கள். ஈசன் தர்சனத்தால் எக்காரணம் பற்றியும் மநுஷ்யர்கள் முக்தி அடைகிறார்கள். மற்ற க்ஷேத்ரங்களில் எந்த புண்ய பாபம் மநுஷ்யர்கள் செய்தாலும் அவ்விடம் ஒன்று கோடி குணமாக அங்கு ஆகும். க்ஷேத்ர பாலரே, அவர்களது பாபசாந்திக்கு பரிபாலனம் செய்யக்கூடியவர் யமன் செய்யமுடியாது. ஸாமர்த்யமுமில்லை. பாபிகளான அவர்களை சூலாயுதத்தால் தண்டிப்பான். கோடி நரகங்களிலும் பாபிகள் எத்தனையோ கல்பத்திற்கு பீடிக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு எவ்வளவு காலம்வரை துக்கம் உண்டாகிறதோ? அந்த துக்கம் அங்கு கோடிபங்காகி, ப்ராணிகளுக்கு கஷ்டம் உண்டாக்குகிறது. க்ஷேத்ரபாலனால் சூலநுனியில் அவர்களை க்ஷணிககாலத்தில் தண்டனை. அடைகின்றனர். கஷ்டம்! அங்கு கல்பகாலம் நராதமர்கள் பீடிக்கப்படுகின்றனர். இவர்களது கதியை நினைத்து எனக்கு தேஹம் நடுங்குகிறது. உனக்கும் அதை உத்தேசித்து க்ருபை பலத்தால் தெரிந்துகொள். நிர்மூட பக்தியால் மோஹமடைந்த மநுஷ்யர் முக்தி க்ஷேத்ர உத்தமோத்தம புண்டரீகபுரம் அடைந்தும், சிவகங்கையில் ஸ்நானம்செய்தும், ஸபாபதியையும் பார்த்தும் புத்தி பூர்வமாக எவர் பாபம் செய்கிறார்களோ? அவர்களுக்குப் பரிஹாரம் சொல்லுகிறேன். இந்த மநுஷ்யர்களுடைய கதியை

நினைத்து எனக்கு புத்தி ஒழுங்காயில்லை. நீ பட்டணமடைந்து தர்சனம் செய்வதாலேயே பாபத்தைப் போக்க ஹேதுமனமுடன் அங்கு இரு, மநுஷ்யன் க்ஷேத்ரபாலனால் பாபங்களைத் துலைக்கப்பட்டு ஸம்ஸாரஸாகர, முக்தியும், சிவஸாயுஜ்யமும் அடையும் தன்மை.

சிவஸாயுஜ்யம் அடைய வந்தவன் ஸபாநாதரை ஒருதடவை பார்ப்பானேயாகில், பக்தியினாலோ, பக்தி இல்லாமலோ, மறுபடி உண்டாகிறானில்லை. தாயின் சரீரத்தில் கர்ப்பவாஸமும் இல்லை. யமன் ஊருக்கு செல்லுதலுமில்லை. புத்திபூர்வமாக செய்தபாபமும் போகிறது. க்ஷேத்ரமானால் பாபம்விலக்கி சிவஸாயுஜ்யமும் அடைகிறான். மநுஷ்யர்களுக்கு அஜ்ஞான பாபமும், உடனே துலைகிறது. அவர்கள் பாபசாந்திக்கு ப்ராயச்சித்தம் கேள்,

சிவகங்கை என்ற தீர்த்தமுடைய புண்டரீகபுரம் அடைந்ததினால் ஸர்வ பாபநாசனம். எவன் காலையில் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறானோ? அவனது பாபங்கள் விடுபடுகிறது. ஜ்ஞானத்தினால் செய்தவனும், மற்றவனும் நற்பதமடைகிறான். தினம் பக்தியுடன் ஸூர்யோதயத்தில் அங்குஸ்நானம் செய்கிறவன், 7-ராத்ரிசெய்த பாபங்கள்எல்லாம் துலைக்கிறான். ஸோமவாரத்தில் ஸ்நானம் செய்கிறதினால் அநேகதினம் செய்த பாபங்களும், துலைகிறது. ப்ரதமை முதலிய தினஙகளில் ஸ்நானம் செய்வானாகில்; ஒருதினபாபமும், பக்ஷங்களில் செய்தபாபமும், பௌர்ணமியில் ஸ்நானம் செய்தமாத்ரத்தினாலேயே துலைகிறது. அமாவாசையில் ஸ்நானம் செய்வானேயாகில்; மாதபாபங்கள் துலைகிறது, க்ருஷ்ணபக்ஷ சதுர்தசி, அஷ்டமி, அமாவாசையில் செய்வதற்கு அதுஸமான புண்யமாகும். வ்யதீபாதத்தில் ஸ்நானம் செய்வதினால் மாதபாபங்கள் விடுபடுகிறது. மாதப்பிறப்பில் செய்கிறதினால் ஒருமாத பாபம் துலைகிறது. ஆருத்ரா நக்ஷத்ரத்தில் ஸ்நானம்செய்கிறதினால் ஒருமாதபாபம்துலைகிறது. துலாஸங்க்ரமணத்தில் ஸ்நானம் செய்வானாகில்; மூன்றுமாத பாபம் துலைகிறது. மகர ஸங்க்ரமணத்திலும், கர்க்கடக ஸங்க்ரமணத்திலும் ஸ்நானம் செய்வதால் ஆறுமாதபாபம் துலைகிறது. மாகமாத மகநக்ஷத்திரத்திலும், மார்கழிமாத ஆருத்ரையிலும், ஸூர்யன் வருகையிலும், ஸ்நானம் செய்த மாத்ரத்தில் ஒருவருஷ பாபம் போகிறது. அவ்விடத்தில் இருக்கிறவர்களுக்கு, அஜ்ஞானம் பாதகம் ஏதாவது உண்டாகுமேயானால்; அதற்கும் இது ப்ராயச்சித்தம். புத்தியால் செய்யாவிட்டாலும், புத்தியால் செய்தாலும் அப்பாபங்கள் எல்லாம் துலைகிறது. ஒரு ஸமயமும் க்ஷேத்ரபாலனது சூலதண்டனை இன்றி ஆகும். தீர்த்தத்தில் ஈசன் ஆச்ரயித்துள்ளார். வேறு ஒன்றுமில்லை. பாபபுத்தியுள்ள மநுஷ்யர்கள், ஜீவரூபத்துடனும், ஜலரூபத்துடனும் பார்க்கிறார்கள். இந்த ஜலரூபத்தை நிந்திப்

பார்களேயானுல்; அவர்கள் கல்பகாலம் வரை நரகத்தில் சமைக்கப்படுவர். இம்மஹாதேவர் நிந்திக்கப்படுவாரேயாகில்; எல்லா தேவரும் நிந்திக்கப் பட்டதாகும். அதில் ஸந்தேஹமில்லே. இவ்விடம் ஸபாநாதர் ஸத்யமாக பூஜிக்கத்தக்கதே எனச் சொல்லப்பட்டது. ஆரோக்யமடைய இஷ்டமுள் ளவன் ஸ்நானம் செய்த மாத்ரத்திலேயே ஆரோக்யமடைகிருன். தினம் பணம் வேண்டியவனும் வச்யமடைய வேண்டியவனும் அவ்விதமே பெறுகிருன். சிவகங்கை ஜலத்தை மநுஷ்யன் சாப்பிட்டு யுத்தத்திற்குச் செல்வானேயாகில்; குறைவில்லாஸைன்யமுடைய யுத்தத்தில் சத்ருக்களே ஜெயிக்கிருன். சிவகங்கைஜலத்தைஎவன் பக்தியுடன் ஏந்திச்செல்கிருனே? அவனுக்கு ஒவ்வொரு இடத்திலும் அசுவமேதபலன் உண்டாகும். வேறு எங்கு சுற்றினுலும் மநுஷ்யன் சிவகங்கை ஜலத்தைக் குடித்த மாத்ரத்தில் இறப்பானுகில்; ஸாக்ஷாத் ஐச்வர்ய பதமடையப்படுகிறது. சிவகங்கை ஜலத்தை எவன் குடித்து வழிநடையில்செல்கிருனே? அவனே ராக்ஷஸாதி கள் பார்த்தால் திக்கு, விதிக்குகளேக்கண்டுஓடுகின்றனர். சிவகங்கை ஜலத்தினுல் மஹாதேவனே அபிஷேகம் செய்து, இங்கேயோ, வேறு இடமோ, பக்தியால்செல்வானேயாகில்; ஈச்வரபதமடைகிருன். சிவகங்கை ஜலத்தினுல் சிவனே எவன் நித்யம் அபிஷேகம் செய்விக்கிருனே? அவ னுடைய ஸர்வ அபசாரங்களேயும், மஹேசவரன் பொறுக்கச் செய்கிருன், சிவகங்கா ஜலத்தினுல் ஸந்தோஷத்துடன் பித்ருக்களேத் தர்ப்பணம் செய்வித்தால், மூன்றுகுல பித்ருக்களேயும் உத்தாரணம் செய்தவனுகிருன்.

தர்மம், அதர்மம், காமம், வேண்டுபவன் அதை அடைகிருன் எல்லோருக்கும் எப்பொழுதும் தேவர் தீர்த்த உருவமாகவே இருக்கிருர். ஆகையால்; அதில் ஸ்நானம் செய்த மாத்ரத்திலேயே, எல்லோரும் ஸ்வர்க்கமடையும் தன்மை. செவ்வாய்க்கிழமை கூடிய க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியில், சிவகங்கையில் எவன் ஸ்நானம் செய்கிருனே? அவன் ஸர்வ பாபங்களினின்றும் விடுதலே அடைகிருன். ஸோம, சுக்ர, குரு வாரம் சேர்ந்த அமாவாசை முதலிய தினங்களில், ஸூர்ய, சந்த்ர, க்ரஹணம் வருமானுல்; அத்தினத்தில் மநுஷ்யன் ஸ்நானம் செய்வானுகில் அவனுக்கு ஸர்வ பாபங்களும் தொலேகிறது. தனது அம்சத்துடன் கங்கை முதலிய ஸர்வ தீர்த்தங்களும் அதில் வருகிறது. ப்ராம்ஹணர்கள் பாபநிவ் ருத்திக்கு ஸதா சிவகங்கா ஜலத்தில் ஸ்நானம் செய்கிறதினுல், தனது அம்சம் அங்கு இருக்கும் உண்மையே சொல்லப்பட்டது. அத்தீர்த்தங்கள் தனது அம்சங்களுடன், மாக மாஸ மக நக்ஷத்ரத்தில், தனது பாபம் தொலேக்க, எல்லா நதிகளும், அதில் ஸ்நானம் செய்கின்றன. அந்தத் தீர்த்தத்தில் ச்ரேஷ்டமாக பக்தியுடன் ஸ்நானம் செய்வானுகில் அவனது ஸர்வ பாபங்களும் விடுபட்டு, சிவஸாயுஜ்யமடையும் தன்மை. அர்த்த ஜாமத்தில் ஸபாபதியின் ஸேவை மிக்கவிசேஷம். அவ்விதமே அத்தினத்

தில் ஸ்நானமும் விசேஷம். இவ்விடத்தில் இருக்கிறவர்களுக்கு அஜ்ஞான பாபமும்; இந்தத்தீர்த்த உத்தமத்தினல் சுத்தமடைகிறது. அதுபற்றி ஸந்தேஹமில்லை.

நான்காம் அத்யாயம் முற்றிற்று.

ஐந்தாம் அத்தியாயம்.

வ்யாஸர்:— இவ்விடம் ஜ்ஞானமில்லாமல் செய்ததிற்கு ப்ராயச்சித்தமாக இன்னும் விசேஷமாய்ச் சொல்லுகிறேன்கேள். ஈச்வரன், ப்ரம்ஹம், இவர்களது ஸொத்தை அபஹரிப்பதை என்னல் சுத்திசெய்ய முடியாது. இது உண்மையாகவே உனக்குச்சொல்லப்படுகிறது. தெரியாத்தன்மையால் ப்ரம்ஹத்தினுடையதை அபஹரித்து மறுபடி பச்சாத்தாபமடைந்து குணமுள்ள ப்ராம்ஹணன் நமஸ்கரித்து, பத்துப்பங்கு அதிக குணமாக ப்ராம்ஹணர்களுக்குப் பணம்கொடுத்து, அவர்களது அநுக்ரஹம் கிடைத்தால், கொஞ்சபாபம் விடுபடும். ப்ரம்ஹத்தின் ஸொத்தை அபஹரிப்பது வேறு உபாயங்களால் சுத்திஅடையாது. ப்ரம்ஹத்தினுடையது அபஹரிப்பதை அறிந்து செய்தவனுக்கு ப்ராம்ஹணப்ரஸாதமோ, தெய்வ ப்ரஸாதமோ இல்லை.

ஜைமினி:— தெரியாத் தன்மையால் தேவதாதன்மை அபஹரித்ததிற்கு, ஹோமம், அர்ச்சனை எதுசெய்தாலும் அவனுக்கு ஒருபோதும் சுத்திகிடையாது. சாந்தமுள்ள பொறுமையடைந்த சிவபக்தனுக்கு, பரமாணுப்ரமாண சுத்தியும் கிடையாது. அஜ்ஞானத்தினல் தேவருக்குக் கஷ்டம் செய்கிறவன்; அஜ்ஞானத்தால் தேவருடையதை அபஹரிக்கிறவன், ஒருபொழுதும் நல்லகதிஅடையான். இவ்விருபாபங்களையும் அநுபவிப்பவன். முன்பு ஒரு சிவசர்மா என்ற ப்ராம்ஹண ச்ரேஷ்டன் மிக்க பக்தியுடன் சிவனுக்கு மூன்று காலமும் பூஜைசெய்து, கார்த்திகை மாதத்தில் சோமநாதர் தேவாலய உத்ஸவத்தில், பக்தி உள்ளவர்களுடன் ஸமுத்ரக்கரையில் ஸேவிக்கும் இடத்தில், விடியற்காலை அடைந்தான். அவ்விடம் ஸ்நானம் செய்து தேவனுன மஹேசனை பக்தி ப்ரபாவத்தால் பார்த்து ஸ்வர்ணம் முதலியவை கொடுத்து இரவில் அவன் ஸேவித்து ஈசனிடம் இருந்துவந்தான். அச்சமயத்தில் அவன்மாதிரி பக்தியுடைய ப்ராம்ஹணக்கூட்டம் வந்தன. அங்கு கூட்டத்தினுல் தேஹம் நசுக்கப்படுகையில், புத்தியில்லாமல் ஒரு தீபம்மட்டும் கீழேவிழுந்து அணைய நேர்ந்தது.

அவ்விடம் அந்த சோமசர்மாவும் அதைப்பார்த்தவனுக இருந்தான். அவ்வுத்ஸவம் முடிந்து எல்லோரும் திரும்பிசென்றனர். பிறகு வெகுகாலம் கழித்து சிவசர்மா, சோமசர்மா இருவரும் இறந்து பிசாசுத்தன்மை அடைந்தனர். ரத்த மாம்ஸங்களினுல் ஒன்பது த்வாரங்களும், அதிக நாற்றமடைந்து, ரொம்பவும் துக்கமடைகையில் புழு, பூச்சிகளால் கடித்த சரீரமுடைய ஸோமசர்மா இளைத்த சரீரமுடையவனுன். மூன்றுயோசனை தூரம் ஸஹிக்கமுடியாத துர்க்கந்தத்துடன், விந்த்ய பர்வதகாட்டில் ஸதா இருக்கிறவனுகி, ஆகாரமில்லாமல் பசியுடன், சிவசர்மா, குட்டையான சரீரமடைந்து, ஸதா பசி அடைந்து, மூன்று கூப்பிடுதூர ப்ரமாணம் நாக்கு வளர்ந்தது. அவன் கண்களை பர்வதமத்தியில், பக்ஷிகள்சாப்பிட்டும் இருந்தன. அவ்விருவர்களும் அதிக துக்கத்தினுல் பீடிக்கப் படுகையில் அங்கேயே காலம் கழிந்தது.

அக்காலத்தில் அங்கு வாமதேவர் என்ற முநி விபூதி சரீரமும், பட்டையான விபூதி தரித்த நெற்றியும், ருத்ராக்ஷமாலை ஆபரணமும், சிவ பாதாம்புஜத்யானம் செய்தும், ஸந்தோஷத்துடன் பஞ்சாக்ஷரத்தை ஜபித்தும், அப்பெரியகாட்டில் தன்மாதிரியேயுள்ள தன் சிஷ்யர்களுடனும் சேர்ந்து காணப்பட்டார். அவர்களிருவரும் மஹாத்மாவான முநியைப் பார்த்து, அடைந்த ஆனந்தமுடையவர்களாகி, அவரை அடைந்து அறிந்து, அவரது காலில் விழுந்தனர். சிவபூஜாநுபவத்தால் பிசாசுத் தன்மையுள்ள அவ்விரு ப்ராம்ஹணர்களுக்கும் நினைவு மறக்குதல் ஒரு ஸமயமும் உண்டாகவில்லை. அவரும் துக்கிக்கும் அவர்களை பரமான க்ருபையுடன் பார்த்து, அந்த துக்ககாரணத்திற்கு அவ்விடம் முநிமனதில் கொஞ்சகாலம் த்யானத்தில் இருந்து நினைத்து திவ்ய கண்ணுல் பார்த்து ஆச்சர்யத்துடன், அந்த பிசாசுகளைச் சொன்னுர். உங்களுக்கு என் வாக்யத்தால் அப்பிசாசு துக்கத்தை நிவர்த்திக்க வழிசொல்லுகிறேன்.

நீங்கள் முன்பு ஸோமநாதம் என்ற மஹாஸ்தானத்தில் மஹோத்ஸவம் ஸேவிக்கையில் சிவத்ரோகம்செய்ய; அதுபெரிய துரோகமாயிற்று. அப்பொழுது அஜ்ஞானத்தினுல் நெய்தீபம் தற்செயலாக நழுவியது. அதனுல் இச்சரீர முழுமையும் ஸஹிக்கமுடியா நாற்றம் வழிகிறது. சிவத்ரவ்ய ஹானியை நீயும் அவ்விடத்தில் சேர்ந்து பார்த்த பாபத்தினுல் அதிகோர கர்மா உடைய இப்பிசாசுத்தன்மை அடைந்தாய். சொல்ல முடியாமல் உனக்கு நாக்கு வளர்ந்தது. கண்ணும் பார்க்க முடியாமல் வளர்ந்துவிட்டது. இரு கல்பங்களுக்கு பிசாசுத்தன்மையுள்ள, வயதும் உங்களுக்கு உண்டாயிற்று. இக்கல்பமுடிவில் சிவலோகம் நீங்கள் செல்லப் போகிறீர்கள், சிவத்ரோகம்துலையுமானுல், கட்டாயம் ஸுகமடைவீர்கள்.

சிவபக்தி உள்ள உங்களுக்கு எந்த அல்பகாலம் இங்கு சென்றதோ? அதற்கு ப்ராயச்சித்தமும்உண்டாகப்போகிறது. அதைகல்பகோடிகாலமும் மாற்றமுடியாது. இவ்விடம் பிசாசுத்தன்மையை வெகுகாலம் ஜனங்களால் பார்க்கப்பட்டது. அதுவரும்வரை இவ்விடத்தில் அதிகம் பீடிக்கப் படுகிறீர்கள். உங்களுக்கு நூறுகல்பத்திற்குப் பின்பு துக்கப்போக்குஆகும். உங்கள் இருவர்களுக்கும், சிவபக்தித் தன்மையால் முடிவில் க்ஷேமம். இதில் ஸந்தேஹமில்லை. எனது தர்சனம் உங்களுக்கு வீணாகாது. ஆகையால்; உங்களுக்கு சங்கரரிடம் நினைவு இருக்க அநுக்ரஹம் செய்கிறேன். மற்றவைஎனக்குச்சக்தியில்லை. சங்கரர்இல்லாமல், பிசாசுமோக்ஷணத்திற்கு காரணம் இல்லை. சிவத்ரோஹம் செய்தமநுஷ்யனை யார்தான் விடுவிக்கமுடியும்! மஹாதேவரின்றி, தேவியோ, ஷண்முகனேமுடியாது சிவத்ரோஹம் செய்த மநுஷ்யனுக்கு மஹாதேவப்ரஸாதம் சிவனேஅறிய வேணும்! அவர்தான் விடுவிக்கமுடியும்! வேறு யாராலும் முடியாது. த்ரோஹம் செய்த மநுஷ்யனுக்கு பகவான் சங்கரர் ஒருபொழுதும் அநுக்ரஹிக்கமாட்டார் என்று முநிகள் சொல்லுகின்றனர். அதுபோல் சங்கரர் தான் அறியமுடியும். இந்தக்கல்பமுடிவில் ஸோமநாதனை நீங்கள்அடையப் போகிறீர்கள். சிவபக்தியில் இருந்து அவ்விடம் முக்தி அடையுங்கள். அதுகாலம்வரை எனது அநுக்ரஹம் சிவனது நினைவுக்கே உண்டாகப் போகிறது.

வ்யாஸர்:— என அப்பொழுது இருவர்களும் கேட்டு அவரால் சொல்லிய பரமானந்தத்தில் மூழ்கினவர்களாகி அம் ம ஹா த் மா வை தண்டாகாரமாக நமஸ்கரித்து, நர்த்தனம் செய்தனர்.

வாமதேவர் தனது சிஷ்யர்களைசிக்ஷிப்பதுபோல்; மறுபடி சொன்னார் ஆச்சர்யம். குழந்தைகளே! பாருங்கள் இந்த சிவபக்தர்கள் மூன்றுகாலமும் சிவபூஜை செய்தவர்கள். தேவர் உத்ஸவத்தைப் பார்க்க பக்தியுடன் சென்றனர். அவ்விடத்தில் ஜ்ஞானமின்றி தீபம் நழுவினதைப்பார்த்ததால் சிவபரர்கள் இக்கஷ்டத்தையுடைய சரீரமடைந்தனர். கஷ்டம்!

மூட ஜனங்களில் சிலர் புத்தி பூர்வமாக தேவர்சொத்தை அபஹரித்ததினால், அவர்களுக்கு இந்தக்கோர கதிஅடையப்பட்டது. அவர்களது கோரகதியை நினைத்து எனக்கு புத்தி ஒன்றும் செய்ய முடியவில்லை. தேவருடையது அபஹரித்ததை யார் பார்க்கிறார்களோ? அவர்களுக்கும் தோஷம்ஸமமே! என பரமேச்வரன் சொல்லுகிறார். உபதேசிப்பவனும், அநுமோதனம் செய்பவனும், செய்யச் சொல்லுபவனும், அதைப்பரிபாலனம் செய்பவனும், உள்ள ஐவரும் துல்ய பலமுடையவர்கள் எனச் சொல்லப்படுகிறது. செய்ததைப் பரிபாலனம்செய்பவனும், அதைப்ரே

ரணை செய்பவனும் செய்பவனுக்கு பலம் பத்து குணம், என புத்திமான்கள் சொல்லுகின்றனர்.

புண்யத்திற்கும், பாபத்திற்கும், ஒரேவிதிதான். சிவத்ரவ்ய அபஹாரத்தை எந்த மடையன் செய்கிறானோ? சக்தியுடன் எந்த மநுஷ்யன் சிரச்சேதம் செய்கிறானோ? இதரர்களால் செய்யமுடியாததை எவன் செய்து கொல்லுகிறானோ? அவன் அதைப்பற்றி ஸந்தேஹிக்கவேண்டாம், அப்படி இன்றி, சக்தி இல்லாமல் எவன் வேறுஇடம் வேகமாகக்கவனிக்காமல் செய்கிறானோ? அவனுக்கு உடனே முக்தி அடையப்படுகிறது. எந்த மநுஷ்யன் சிவத்ரவியத்தை அபஹரிக்கிறானோ? அவனதுபாபத்தை அநேக உபாயங்களாலும் நிவர்த்தி செய்யமுடியும். இவ்விதம் மநுஷ்யன் ஸாக்ஷாத்தாகச் செய்வானேயாகில், பரமேச்வரனுக்கு இஷ்டனாகிறான். இல்லாவிடில் சிவபக்த தமனும், பூஜையில் இருக்கிறான். ஆகையால் தேவருடையதை மோஹத்தால் திருடி ஆத்மாவுக்கு ஹதத்தை இச்சிப்பவன், எதையும் பார்க்கக்கூடாது. தேவாலயத்தில் உள்ள புல்முதலியவைகளை அபஹரிக்கவும் கூடாது. தேவருக்கு உபயோகமில்லாத எதையும் அபஹரித்தால் கஷ்டம்தான் உண்டாகும்.

தேவாலய சொத்துள்ள பத்ரம், புஷ்பம், இவைகளை முட்டாள் தன்மையில் எடுத்து வேறு ஸ்தலத்திற்கோ, அல்லது வேறு எவருக்கும் கொடுக்கவே கூடாது. தேவருடையதைக் காப்பாற்றும் அதிகாரிஉள்ளவர்கள், அதைத்திருடும் பாபம், நூற்றுக் கணக்கானதாகப் பெருகும். தேவாலயத்தில் சூதாடுதல், வெற்றிலை போட்டுக்கொள்ளுதல், எண்ணைதேய்த்து ஸ்நானம் செய்தல், உடம்பை தேய்த்தல், பிடித்தல், ஆளை எவுதல், இவை செய்யக்கூடாது. ஆபத்திலிருந்தாலும், மல மூத்ரங்கள் விடக்கூடாது. அஸப்யப் பேச்சுகள், ஒரு ஸமயமும் தேவாலயத்தில் சொல்லக்கூடாது. தேவாலயத்தில் சாப்பிடக்கூடாது. குடிக்கக்கூடாது. ஒருபொழுதும் உயர்ந்தஆஸனத்தில் இருக்கக்கூடாது. மாடுமேல், பல்லக்குமேல்போகவே கூடாது. கலகம் செய்தல், பொய்சொல்லுதல், முதலியன மனப்போக்குக் கார்யங்களையும் விசேஷமாக விட்டுவிடவேணும். தேவாலய தீர்த்தத்தை ஒருபொழுதும் தூஷிக்கக்கூடாது. சுத்தமற்றவன், தீட்டுஉள்ளவன், ஒரு ஸமயமும் ஸ்நானம்செய்யக்கூடாது. ஈச்வரநிர்மால்யத்தை ஒருபொழுதும் மிதிக்கக்கூடாது. தாண்டக்கூடாது. ஒருஸமயமும் விமானநிழலை காலால் மிதிக்கக்கூடாது. தேவரது பலிபீடத்திற்குக் குறுக்கே, ஒருஸமயமும் போகக்கூடாது. இதுமுதலிய ஸதாதோஷமுள்ளவைகளைத்தள்ளவேணும். விசேஷமாக தேவதாத்ரவ்ய ஹானியும், அதைப்பார்ப்பதும், இவ்விதம் உள்ளதோஷமும் சிவனுக்கு இஷ்டமில்லாதவை. ஆகவே இவர்களது சதிக்கு இதுகளில் உள்ளகாரணம்.

வ்யாஸர்:— என சிஷ்யர்களைச் சொல்லி எச்சரித்து வாமதேவ மஹாமுனி ப்ரீதியுடன் பஞ்சாக்ஷரத்தை ஜெபித்துவந்த வழியே சிஷ்யர்களுடன் சென்றார். முனியே! தேவரது பெருமையுள்ள ஸாமான்களை அபஹரிப்பதும், மிகக்கஷ்டம் என நீ நினை! ப்ராஹ்மணனுடையது, தேவருடையது, இவை திருடுதல், இன்னும் வேறுபாபங்களையும் ஜ்ஞானமில்லாமல் செய்தல் தப்பு என உணர்ந்து இப்பத்து தீர்த்தங்களிலும் எவன் ஸ்நானம் செய்கிறானோ? அவனுக்கு உடனே அவைகள் தொலைகிறது. அதில் ஸந்தேஹமில்லை. பக்தியாலோ? புத்தியாலோ நான்சொல்லவில்லை உள்ளதையே சொல்லுகிறேன்.

ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று.

ஆறாம் அத்தியாயம்.

ஜைமினி:— பகவானே இப்பொழுது உங்களால் பத்துதீர்த்தங்கள் உள என சொல்லப்பட்டது. அதன் பெயர்களையும் எனக்கு அந்தந்த ஸ்தானங்களையும் சொல்லும்.

வ்யாஸர்:— முனியே! வ்யாக்ரபுரத்தில் தீர்த்தங்கள் எங்குஇருக்கின்றனவோ அவை எல்லாம் தீர்த்தங்களே அதில் ஸந்தேஹமில்லை. அப்படி இருந்தும் எது முன்பு தேவரான ஈசனால் தேவிக்கு சொல்லப்பட்டதோ? அதை நான் உனக்கு பக்தியால் கேட்டதிற்கு இப்பொழுது சொல்லுகிறேன் கேள்.

1. சிவகங்கை என்ற பெயருடைய தீர்த்தம் ஸர்வதீர்த்தங்களிலும் உத்தமோத்தமம். நர்த்தனம் செய்கிற சித்ஸபேசனது வடக்கு திக்கில் எதுகாணப்படுகிறதோ? அதுவே முதல் தீர்த்தம் என பரமேச்வரன் சொல்லுகிறார்.

2. புண்டரீகபுரத்தில் குஹ்யதீர்த்தம் என்ற பெயருடையது ஒன்று உள்ளது. கிழக்கே மேற்கு ஸமுத்திரத்தில் ஸர்வதேவர்களால் ஸேவிக்கப்பட்டது. உலகத்தை அறியக்கூடிய சங்கரரைக்காட்டிலும் வேறு எந்த தேவர் அதை அறியமுடியும். அதினின்று அது குஹ்யதீர்த்தம் எனப் பெயரடைந்தது என மஹர்ஷிகள் சொல்லுகின்றனர். ரஹஸ்யத்தை அந்த சிவன் தேவிக்கு முன்புசொன்னார். பிறகு ஸ்கந்தருக்குகேட்கையில்; சொல்லப்பட்டது. ஸ்கந்தர்ஸநத்குமாரருக்கு சொல்லியது. பிறகுமுனிகள் தேவர்கள் கூடிய ஸபையில் அவரிடமிருந்து நான்கேட்டது. மாகமாத

மகநக்ஷத்ரத்தில் கேள்விப்பட்டு ஸ்நானம்செய்து முக்தி அடையக்கூடியது. அவ்விடத்தில் ஒரு சண்டாளன் முன்பு பாபநிவ்ருத்திக்கு ஸதா மாகமாத மகநக்ஷத்திரத்தில் கேள்விப்பட்டு ஸ்நானம்செய்து உடனே பாபமில்லா முக்தி அடைந்தான். இத்தீர்த்தம் மிகச்ரேஷ்டமானது. இது இரண்டாவது என சங்கரர் சொல்லுகிறார்.

3. சங்கரரது தெற்குபாகத்தில் புலிமடு எனப்பெயரிய தீர்த்தம் ஒன்றுள்ளது. சிவாகமத்தில் தீரரான வ்யாக்ரபாதரால் விஸ்தாரமாக இது செய்யப்பட்டது. அது புலிமடுஎன உலகில்கியாதிஅடைந்து ஸர்வவர்ணச்ரமர்கள் ஸ்நானம் செய்தமாத்ரத்திலேயே சுத்தியைதருகிறது. அதுசங்கரரால் நிர்மாணம் செய்தது. சிவகங்கை என்ற தீர்த்தமும் ஸ்நானம்செய்த மாத்ரத்திலேயே சுத்தி அடையக்கூடியது. அப்படி இருந்தும் சண்டாளர்கள் இதை தொடக்கூடாது எனகருதி அதை நிர்மாணம் செய்தார். ஆகையால் ஸர்வ மநுஷ்யர்களுக்கும் ஸ்நான மாத்ரத்தினுலேயே சுத்தியைக்கொடுக்கும்படி தேவதேவர் க்ருபையினல் சூல நுனியினுலேயே நிர்மாணம் செய்தார். ஞாயிறு அஷ்டமிதிதி, வ்யதீபாதம் சூன்யதிதி திருவாதிரை ஞாயிறுவரும் ஸங்கராந்தி குருவாரம் ஸர்ப்பதிதி. இவைகளில் எவன் பக்தியாக ஸ்நானம்செய்து சிவயோகிக்கு இவ்விடத்தில் தானம் செய்கிருனே? அவன் ஸர்வபாபங்களினின்றுவிடுபட்டு சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிருன். இந்த தீர்த்தம் மூன்றுவது என சங்கரரால் சொல்லப்பட்டது.

4. அதன் மேற்குபாகத்தில் வ்யாக்ரபாதேச்வரம் எனபெயருடைய ஸ்தானம் தேவதேவரான உமாநாதனை முநிபூஜை செய்த இடம். அந்த தேவதேவரது முன்னிலையில் இந்த உத்தமதீர்த்தம் காணப்படுகிறது. வ்யாக்ரபாத தீர்த்தம் என்ற பெயருடையது, அதை ஸர்வதேவர்களாலும் ஸேவிக்கப்படுகிறது. ஞாயிறு சூன்யதிதி வ்யதீபாதம் சூர்யசந்த்ரக்ரஹணங்கள்இவைகளில் ஒருவன்ஸ்நானம் செய்வானுகில்; அவன்பாபங்களிலிருந்து விடுபடுகிருன். கன்யாமாத க்ருஷ்ணுஷ்டமியில் சூர்யன் வருகையில் விசேஷமாக ஸ்நானம் தானம் இவை செய்து ஈசனை பார்த்தவுடனேயே சிவன் அவனுக்கு முக்தியைகொடுக்கிருர். ஸ்நான மாத்ரத்தினுலேயே அபம்ருத்தியுஜரை, வ்யாதி இவை தொலகிறது. இந்ததீர்த்தம்நான்காவது என தேவிக்கு ஈசனுல் சொல்லப்பட்டது.

5. அனந்தேச்வரம் என்ற பெயருடைய ஸ்தானம் அவ்விடத்தில் உள்ளது. சேஷன், பதஞ்சலி என்ற பெயருடன் எவ்விடத்தில் தேவரை பூஜைசெய்தானே? அவ்விடத்தில் அவன் மடம்செய்து கடுமையானதபஸ் செய்து ஸஞ்சரித்தானே? அவ்விடத்தில் ஈச்வரனது முன்னிலையில் எந்த

தீர்த்தம் காணப்படுகிறதோ; அதுதான் அனந்ததீர்த்தம் எனபெயருடையது. ஸர்வ தேவர்களாலும் பூஜிக்கப்பட்டது. ஞாயிறு திருவாதிரை வ்யதீபாதம் பருவம், மனுதினம் க்ரஹணம் இவைகளில் ஸ்நானம்செய்வானாகில்; பாபங்களினின்று விடுபடுகிருன். இந்த தீர்த்தம் ஐந்தாவது என தேவிக்கு ஈசன் சொல்லியது.

6. அனந்தேச்வரத்திற்கு மேற்குபாகத்தில் ஸர்வ பாபங்களையும் துலைக்கக்கூடிய நாகதீர்த்தம் மநுஷ்யர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. நாகராஜன் பதஞ்சலி பிலத்வாரத்தினின்று வருகிறவனுகி எவ்விடத்தில் எழுந்தானோ? அது முன்பு தீர்த்தமாக ஆனது. அது ஆருவது எனச் சொல்லப்பட்டது. ஸர்ப்பதிதி ஞாயிறு கன்யாமாத பருவதிதி இவைகளில் பக்தியால் ஸ்நானம் தானம் செய்துவந்தால் ஸகலபாதகங்களும் அவனுக்கு துலைகிறது.

7. அதற்கு வாயுதிக்கில் மஹாஸ்தானம் ப்ரம்ஹேச்வரம் என்ற பெயருடையது உள்ளது. எந்த லிங்கபூஜையால் ப்ரம்ஹா சைவதாண்டவத்தை பார்த்தாரோ? அதின் வடக்கு பாகத்தில் அத்தீர்த்தம் ப்ரம்ஹ தீர்த்தம் என பெயரடைந்தது, சுக்லபக்ஷ அஷ்டமி, ஞாயிறு சதுர்தசி மன்வாதி யுகாதிகளில் ஸந்தோஷத்துடன் ஸ்நானம் தானம் ஜபம், ஹோமம் அர்ச்சனம் முதலியன அவ்விடத்தில் செய்வானேயாகில்; அக்ஷய பலம் உண்டாகும். தேவேசனை பார்த்ததும் ஸர்வ அர்த்த தன்மையும் அடையும். சிவபக்தியுள்ள ப்ராம்ஹணனுக்கும் சிவலோகம் அடையப்படுகிறது. அந்ததீர்த்தம் ஏழாவது என தேவர் சொன்னுர்.

8. அதற்கு வடக்கில் ப்ரம்ஹசாமுண்டீச்வரம் என்பது. அதற்கு தெற்குபாகத்தில் ப்ரம்ஹ அம்சமுடைய அவன் முன்னிலையில் சிவப்ரியை என்ற தீர்த்தம் உள்ளது. அவ்விடத்தில் ஸ்நானம் செய்தமாத்ரத்தில் சிவனுக்கு ப்ரியனுகிருன். ஆகையால் சிவப்ரியை என்றபெயர். முன்பு ரிஷிகள் அதை சொல்லி உள்ளார்கள். மாதந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் அவ்விடத்தில் எவன் ஸ்நானம் செய்கிருனே? அவனுக்கு ஈசன் ப்ரியமுள்ள உண்மை முக்திகொடுக்கிருர். இது எட்டாவதுதீர்த்தமென தேவிக்கு ஈசன் சொன்னுர்.

9. அதன் தெற்குபாகத்தில் க்ஷீராப்தி என்ற தீர்த்தம் உள்ளது. எவ்விடத்தில் ஈசன் முன்பு உபமன்யுக்கு பால்ஸமுத்ரம் அளித்து அவ்விடம் மஹத்தரமான ப்ரீதியைகொடுத்தாரோ? அதில்நித்யம்மநுஷ்யன் ஸ்நானம் செய்வானுகில்; ஸர்வஸித்தியும் அடைகிருன். வ்யாக்ரபாதர்

பிள்ளை மஹாமுநி முன்பு அதில் ஸ்நானம்செய்து தேவர்களால் அடைய முடியாத சிவாகம வித்திக்கரையை அடைந்தார். அங்குதான் அவருக்கு சிஷ்யனுக க்ருஷ்ணன் வந்தது. அந்த தீர்த்தம் ஒன்பதாவது என சொல்லப்பட்டது.

10. ஆனந்தம்என்பது சபையின் கிழக்குபாகத்தில் காணப்படுகிறது. அது பரமானந்த கூபம் என்றபெயருடைய பத்தாவது தீர்த்தம். அதில் ஈசன் பார்வதி உருவமாகவே இருக்கிறுர். இது ஸத்யமாக சொல்லப் பட்டது. எந்த கடாக்ஷத்தினுல் நித்யம் ஸபாபதி பார்க்கிறுரோ? அந்த தர்சனம் பரமானந்தமாக ஸதாசெய்யும் நர்த்தனம். அதிலே கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களும், இன்னும் மற்றுமுள்ள தீர்த்தங்களும், எப்பொழு தும் மஹத்தரமாக வஸிக்கின்றன. சு க்ர வா ர ம் நவமி சந்த்ரஸூர்ய க்ரஹணங்கள் இவை சுக்ரவாரத்தில் ஏற்பட்டால் முக்யவிசேஷம். மாக மாத சப்தமியில் மநுஷ்யன் ஸ்நானம் செய்வாளுகில்; உடனே முக்தி அடைகிறுன். ஐப்பசிமாத சுக்லபக்ஷ நவமியில் எவன் அவ்விடம் ஸ்நானம் செய்கிறுனே? அவன் சீக்ரமாக வாக்ஸித்தி அடைகிறுன். எவன்பக்தியால் அணுமாத்ரம் ஜலத்தை குடிக்கிறுனே? அவன் ஊமையாளுலும் ஒரு வருஷத்தில் கவியாகிறுன். அதில் ஸந்தேஹமில்லை. எவனும் பக்தியுடன் ஜலபானம் செய்தமாத்ரத்தில் நியமமே உள்ளது. அதினுல்தான் ப்ருஹஸ் பதியும் வாக்பதி ஆனுர். அதுவும் ஒருவருஷ காலத்தில் அடையப்பட்டது. புத்ரன் இல்லாதவர்கள் சிவஜ்ஞான புத்ரனை நிச்சயமாக அடைகிறுர்கள். ஜலபானம் அவனுக்கு ஸர்வார்த்தமாகும். எல்லாருக்கும் அதுகிடைக்கும். காமமின்றி ஜலபானம் செய்தால் நல்ல ஜ்ஞானமும் உண்டாகும். இது பத்தாவது தீர்த்தம் எனசொல்லப்பட்டது.

ஜைமினி! உனக்கு இந்தபத்து தீர்த்தங்கள் சொல்லப்பட்டது. இவைகளில் ஸ்நானம் செய்தமாத்ரத்தில் ஸர்வபாபங்களும் தொலைகிறது. தைமாத அமாவாசையில் இந்த பத்து தீர்த்தங்களில் வரிசைக்ரமமாக ஸ்நானம்செய்து ஸபாநாதரை பார்த்ததும் சிவஸாயுஜ்யமடையும் தன்மை. இங்கு இருக்கும் ஜ்ஞானமில்லை. மநுஷ்யர்களுக்கு எந்தபாபம் உண்டா கிறதோ? அவர்களுக்கும் இந்தஸ்தானங்களில் செய்த சிவத்ரோஹமும் சுத்திஅடையும் தன்மை. அப்புண்டரீக புரத்தில் ஸர்வதேவர்கள் ரிஷிகள் பக்திபுரஸ்வரமாக ப்ரதிஷ்டையை இதற்காகவே செய்துள்ளனர். தேவரது கிழக்கில் ஹரீச்வரம் எனப்பெயரியலிங்கமும் முன்பு தேவநாதனுன விஷ்ணுவால் ஸ்தாபனம் செய்யப்பட்டது.

அதன் தெற்குபாகத்தில் மஹாலக்ஷ்மியால் கமலேச்வரம் என்ற பெயருடையது இந்த்ரனுல் ப்ரதிஷ்டை செய்தது காணப்படுகிறது.

அதற்கு தெற்கில் லிங்கம் ஒன்று அர்க்கேச்வரம் என ஸூர்யனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அதை பார்த்த மாத்ரத்தினலேயே ஸர்வ ரோகங்களும் தொலைகிறது.

அதற்கு அக்னிதிக்கில் ஓங்காரேச்வரம் என்ற பெயருடைய லிங்கம் ஸர்வ வித்யாஸ்வரூபரான ஸரஸ்வதியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸர்வவித்யாஸ்வரூபி இவள் ஓங்காரரூபமுள்ளவள் பாரதி. அதினல் ஓங்காரேச்வரம் என்றபெயர். முன்னளில் ஸரஸ்வதியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அவ்விடத்தில் தேவேசரை உபாஸித்து சீக்ரமாக வாக்ஸித்தி அடையலாம்.

அதன் தெற்கில் வருணேச்வரம் என்ற லிங்கம் ஒன்று இருக்கிறது. வருணனல் ப்ரம்ஹ ஹத்திநிவ்ருத்திக்கு ஹரீச்வரம் என்ற லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

அதன்கிழக்கில் அற்புதப்ரகாசமுடைய லிங்கம்ஒன்றுகாணப்படுகிறது. நந்தீச்வரம் என்றலிங்கம் நந்தியால் ஸ்தாபனம் செய்யப்பட்டது.

அவ்விதமே அர்ஜுனேச்வரம்; இந்த்ரேச்வரம் வாலீச்வரம், தாரேச்வரம் யவக்ரீவேச்வரம் காலேச்வரம் ஸ்கந்தேச்வரம் வைநாயகேச்வரம் முதலியவை தெற்கு திக்கில் ப்ரஸித்தி உடையதுகளாக இருக்கின்றன.

வால்கலேச்வரம் வைகுண்டனேச்வரம் வ்யாக்ரபாதேச்வரம் நந்தீச்வரம் வாய்வீச்வரம் பாஷ்களேச்வரம் வத்ஸேச்வரம் ஊர்வசீச்வரம், ஸாத்யேசம் விச்வாமித்ரேச்வரம் இவைகள் மேற்குதிக்கில் இருக்கின்றன

ஸ்தானந்தேச்வரம் நளேச்வரம் மாணிபத்ரேச்வரம் வைச்ரவணேச்வரம், வாமதேவேச்வரம், கண்வேச்வரம், அத்ரீச்வரம், ப்ருக்வேசம் வ்யாஸேச்வரம், பத்ராச்வேச்வரம் இவை வடக்குபாகத்தில் இருக்கின்றன

இன்னும் அநேக லிங்கங்கள் அங்கு ஸ்தானமடைந்து மஹேச்வரனுக்கு காரணமாயுள்ளது காண்கிறது. அதன்மத்தியில் என்னல் உனக்கு சில சொல்லப்பட்டது. மநுஷ்யன் இவைகளை பார்த்தமாத்ரத்தில் சிவலோகத்தில் பூஜிக்கும் தன்மையை அடைகிருன். இவ்விடத்தில் வஸிக்கும் மனிதன் அவ்விடத்தில் அஜ்ஞானத்தால் செய்தபாபங்களில் சிவத்ரோஹம் தவிர மற்றவை எதுவும் விடுபடுகிறது. அதுபற்றி ஸந்தேஹமில்லை. அது போகங்களாலும் சுத்திஅடைகிறது. வேறு எந்த கோடி கர்மாக்களும் ஸரி. வேறுவிதமாக ஆகிறதில்லை. தேவர்களுள் எவ்விதம் தேவர் சபாபதியோ? அவ்விதம் தீர்த்தம் க்ஷேத்ரம் இவைகளில்

எல்லாவற்றிலும் சிவகங்கை மிக்க உயர்வு உள்ளது என்னால் இது சொல்லப்பட்டது.

ஒருஸமயம் ஸர்வதீர்த்தங்களில் ஸ்நானம்செய்ய தனது பக்தர்களுக்கு இஷ்டமிருக்குமேயானால்; அதை பூர்த்திசெய்ய சபாபதி சிவகங்கை உருவமாகதானே இருக்கிறார். ஆகையால் அதற்குஸமான தீர்த்தமும் இம்மூன்று உலகங்களிலும் காணப்படுகிறதில்லை. இது என்னால் உனக்குஸத்யமாக சொல்லப்பட்டது. இதில் ஸந்தேஹத்திற்கு காரணமே இல்லை. ஸர்வ க்ஷேத்ரங்களிலும் புண்டரீகபுரம் மிக்கச்ரேஷ்டம். அவ்விதமே தீர்த்தங்களுள் சிவகங்கை என்ற தீர்த்தமும் ஸர்வ தேவர்களுள் தேவாதி தேவரான ஸபாபதியும் ஒருவரே. எல்லாவற்றிற்கும் அவரே முக்தி அளிக்கவல்லவர். இம்மூன்றும் எங்குசேருகிறதோ? அங்குதான்முக்தி. இதில் ஸந்தேஹமில்லை. என ச்ருதியே சொல்லுகிறது. ஈசன் தினமும் பாபங்களை தொலைப்பவராக எவ்விடம் நர்த்தனம் செய்கிறாரோ? அங்கேயே நித்யம் ஸர்வ யத்னத்துடன் புத்திசாலி நன்றாக வஸிக்கவேணும்.

ஆறாம் அத்யாயம் முற்றிற்று.

——

ஏழாம் அத்தியாயம்.

——

ஜைமினி:— வ்யாஸரே! கைலாஸத்தில் ஸாக்ஷாத் சங்கரர் ஸதா இருக்கிறார் என புராணங்களிலும் ஆகமங்களிலும் என்னால் கேட்கப்பட்டது. புண்டரீகபுரத்தில் சித்ஸபையில்தான் மஹாதேவர்ஸதாநர்த்தனம் செய்கிறார் என உலகங்களால் எவ்விதம் சொல்லியதோ? அதை புண்யசாலியான நீர் மறுபடியும் சொல்லும். இதைகேட்டு அவ்வார்த்தையில் எனக்கு ஹ்ருதயபூர்வமாக பெரிய ஸந்தேஹம் ஏற்பட்டுள்ளது. இவ்வார்த்தைகளுக்கு விரோதமின்றி பதில் சொல்லவேணும்.

வ்யாஸர்:— முன்பு ஸந்தேஹ மனமுடைய லோகநாதன் விஷ்ணுவால் இவ்விதம்கேட்கப்பட்டு பக்தனான அவனுக்கு ஈசன் அதைசொன்னார்.

ஈசன்:— இது ஸர்வ ஜகத்திற்கும் ஹிதமுள்ளது. நல்ல ஸ்தானத்தில் உன்னால் கேட்கப்பட்டது. உனக்கு அதிரஹஸ்யம் சொல்லப்போகிறேன். நான் ஸர்வ ஜந்துக்களுக்கும் ஆத்ம உருவமாய் எங்கும் இருக்கிறவன். உள்புறம் ஸர்வ பூதங்களிலும் நானே இருக்கிறேன். வேறு ஒருவருமில்லை. நானன்றி ஒருவஸ்துவும்காணாது. நான்எங்கும்இருப்பேன். என் ப்ரகாசம்தான் அதிகம். வேறு இடமிருந்து விஷயங்கள் இல்லை.

அதைகேள். ஸூர்யனுடைய தேஜஸ் மநுஷ்யர்களுக்கு எல்லாவிடமும் இருக்கிறதாக இருந்து ஆகாசத்தில் காணப்படுகிறது. மரங்களில் காணப் படுகிறதில்லை. மரத்திலும் கண்ணாடியிலும் காணும் ப்ரகாசம். அதிகமாக மரங்களிலும் கண்ணாடியிலும் உள்ளது.

கண்ணாடியில் ஸ்படிகத்தில் அதுவே காண்கிறது. கண்ணாடியைக் காட்டிலும் ஸ்படிகத்தில் அதிகமாக காண்கிறது. ஸ்படிகத்தைகாட்டிலும் ஸூர்யகாந்தக் கல்லில்தான் அதிகமாகப்ரகாசிக்கிறது. அதில் எரிக்கும் தன்மையும் காணப்படுகிறது. இப்படியே எனது ஸ்வரூபத்தை அறி. அதில் இருக்கிறதுபோல் எல்லா ஜந்துக்களிலும் கிடையாது. மநுஷ்யர் களால் அறியப்படும் லிங்க உருவத்தில் மநுஷ்யலிங்கத்தில் ரிஷி க ள து லிங்கத்தில் எல்லாம் அதிகப்ரகாசம் அடைகிறது.

ரிஷிகளை காட்டிலும் ஸர்வபூதப்ரகாசம் உயர்வு. ஸ்வயம் பூதத்தை காட்டிலும் மஹாலிங்கத்தில் எனக்கு உத்கிருஷ்டதன்மை, புண்டரீக புரத்தில் நித்யம் ஸத்யமாகவே நான் இருக்கிறேன். இது உண்மை. வேறு இடத்தில் கண்டிப்பாய் இல்லை. அதிலும் ஆனந்தம் என பெயரிய ஸபையில் விசேஷமாக நான் இருக்கிறேன். பரமானந்த ப்ரகாசம் எனக்கு அங்கு காணப்படுகிறது. அதனுல்தான் அதற்கு ஆனந்தசபை என உனக்கு சொல்லப்பட்டது. கேள்! அதினுல்தான் அங்கேயே நித்யம் நான்நர்த்தனம் செய்கிறேன். அவ்விடத்தில் ப்ரகாசம் எனக்கு எவ்விதம் உள்ளதோ? அதுமாதிரி வேறு எங்குமே கிடையாது. இவ்விடத்தில் அதிகம் பொருத்தமிருத்தலினுலேயே ஸூர்யகாந்த கல்லிலும் ஸூர்யப்ரகாசமும் உயர்வுதான். அதுபோல் இங்கும் உயர்வு. உஷ்ணஸ்வபாவம் ஸூர்ய னுடையது. அதிலேயே அதிக உஷ்ணம் என்பதும்ஸரியே. அவ்விதமே சந்த்ரனுக்கும் ஜலஉருவமுள்ள சந்த்ரகாந்தகல்போலும் உள்ளது. இது அதிக பொருத்தமுடையதாகி சந்த்ரகாந்தக்கல்லிலும் ஜலத்தை அதிகம் விடுகிறது. எனக்கும் ஆனந்தஸ்வபாவம். அவ்விதமே ஆனந்தமும்அதிகம். அவ்விடத்தில் ஆனந்தத்தின் மேலீடு தெரிவிப்பது. அங்கு நித்யம் எனக்கு உள்ளது. வேறிடத்தில் எங்கும் இல்லை. எல்லாவிடமும் எனக்கு ஸான் னித்யம் இருக்கிறது. அதில் ஸந்தேஹமில்லை. அப்படி இருந்தும் புண்டரீகபுரத்தில் எனக்கு ஸாந்நித்யப்ரகாசம் அதிகம். எனது அம்சம் கைலாஸ பர்வதங்களில் எங்கும் இருக்கும்.

அகண்டரூபமாக நித்யம் புண்டரீகபுரத்தில் இருந்துகொண்டு ஸ்ருஷ்டி ஸ்திதி நாசம் இந்த வ்யவஹாரங்கள் வித்திக்க நான் இந்த தேவதைகளை சேர்க்கிறேன். ஆகையால் என்னை இவ்விடம் இந்த்ரன் முதலிய தேவர்கள் தனது அதிகாரத்திற்கு இங்கு வந்து நமஸ்கரித்து

செல்கின்றனர். பரமானந்த ஸமுத்ரத்தில் ஒளிந்துள்ள என்னை புண்டரீக புரத்தில் ஸர்வதேவதைகள் ஆதரவுடன் முக்திவிதிக்க ஸேவிக்கின்றனர். ஆகவே எனது ஸ்வரூபம் அவ்விடத்தில் ஸதா இருக்கிறது.

இவ்விடத்திலும் நான் வ்யவஹாரம் விதிக்க என் அம்சமாகவே தேவி பார்வதியும் நித்யமாக புண்டரீகபுரத்தில் இருக்கிறாள். ஒரு அம்சம் இருந்தபோதிலும் உலகத்தின் ஹிதத்திற்காகவே விநாயகர், ஸ்கந்தர் நந்தி முதலியவர்களும் அங்கு இருக்கிறார்கள். அவ்விடத்தில் இருக்கிற வர்கள் ஒரு அம்ச உருவத்துடனேயே இருந்துவருகிறார்கள். ஆகவே அது ஆனந்தசபை. எனக்கு மிகப்ரியமான இடம். அதில் ஸந்தேஹமில்லை. மற்றும் இதரஇடங்களிலும் ப்ரியமாகவே எனக்கு இருக்கிறது. அவைகள் அநேகம் இங்கு என்னால் வர்ணிக்கமுடியாது.

அப்படி இருந்தும் அவைகளுள் இது தனிமையாக உள்ளது இதை கேள். எல்லாவிடங்களிலும் எப்பொழுதும் நான் ஸதாசிவரூபமாகவே இருக்கிறேன் என நீ அறி. எவ்விடத்தில் நீ முநிசாபத்தால் வஸு தேவருடையவீட்டில் குழந்தைகளுடன் உண்டானீரோ? அங்கு தனது சரீரத்தை ஆத்மாவுடன் சேர்த்தே பார்க்கிறீர். கைலாஸத்தில் எப்பொழுதும் நான் இருக்கிறேன். கேதாரக்ஷேத்ரத்திலும் மஹாகேதாரன் என்பவனால் நன்கு பூஜிக்கப்படுகிறேன். மேற்கு ஸமுத்ரத்தில் ப்ரபாஸம் ஸௌராஷ்ட்ரம் இவைகளில் எப்பொழுதும் நான் இருந்துவருகிறேன். ஸோமநாதத்தில் உன்னால் எப்பொழுதும் உபாஸிக்கப்படுகிறவனாய் இருக்கிறேன். விச்வ நாதரை காசியில் உன்னால் பூஜிக்கப்படுகிறது. எல்லோர்க்கும் மரண காலத்திலும் முக்தி கொடுப்பவனாகி எப்பொழுதும் அங்குஇருக்கிறேன்.

கோகர்ணம் என்ற மஹாக்ஷேத்ரத்தில் மேற்கு ஸமுத்ரக்கரையில் நான் எப்பொழுதும் இருக்கிறேன். ஸர்வதேவர்களாலும் அங்கு பூஜிக்கப் படுகிறேன். பர்வதச்ரேஷ்டமான ஸ்ரீபர்வதத்தில் எனது ஸ்வரூபம் ஸதா சிவரூபமாகவே உள்ளது. ஸ்ரீமத் தக்ஷிணகைலாஸம் என்ற உத்தம பர்வதத்தில் ஸ்வர்ணமுகரீ கரையில் எப்பொழுதும் நான் இருக்கிறேன். வெங்கடாத்ரியில் நீ.ஸேவிப்பதினால் ஸதாநான் அங்கு இருந்துவருகிறேன் ஸ்ரீகாஞ்சி என்ற மஹாக்ஷேத்ரத்தில் எப்பொழுதும் இருக்கிறேன். காமாக்ஷி அவ்விடத்தில் என்னை தபவில்இருந்து நித்யம்ஸேவிக்கிறாள். கிரியின் மேல்பாகத்தில் உன்னுடன் இருந்துகொண்டு ஸர்வதேவர்களுட னும் எப்பொழுதும் அண்ணுமலையில் நித்யம் இருந்துவருகிறேன்.

பார்வதி எவ்விடத்தில் இருந்து ராக்ஷஸர்களை கொன்றாளோ? அவ்

விடமே கோபர்வதம் பத்ராத்ரி அங்குநான் எப்பொழுதும் இருக்கிறேன். கஜாரண்ய மஹா க்ஷேத்ரத்திலும் ராக்ஷஸேந்த்ரனால் பட்டணத்திற்கு கொண்டுபோனதை திருப்பசெய்துள்ளேனே? அங்கு நான் எப்பொழுதும் இருக்கிறேன். இவ்விதம் க்ஷேத்ரமஹாத்மியம் அறிந்து ஸதா மஹாப்ரகாச முடைய ஜப்யேச்வரத்தில் இருந்து எவர் ஸேவிக்கிறார்களோ? அங்குநான் ஸதா இருக்கிறேன். அவ்விதமே ஸுந்தரக்ராமத்திலும் தக்ஷிணாவர்த்தத் திலும் கும்பகோணத்திலும் என்னை உன்னால் எப்பொழுதும் ஸேவிக்கப் படுகிறது. மத்யார்ஜுனத்திலும் நித்யம் இருப்பவனாகிறேன். அவ்விதமே கோவடு என்ற க்ஷேத்ரத்திலும் கௌரீ மாயூரத்திலும் இருக்கிறேன். பார்வதி மாயூரரூபமாக எவ்விடத்தில் பூஜைசெய்தாளோ? அவ்விடத்திலும், தேஜநீலத்திலும் எப்பொழுதும் நான் இருக்கிறேன். என்னை ஆயிரம்தாமரை யால் நீ பூஜிக்கையில்; பார்க்கும்பொழுது ஒன்று குறைவு ஏற்பட்டது கண்டு உனது கண்ணைபிடுங்கி பக்தியால் பூஜைசெய்கையில்; எனது சக்ரம் அடைந்தாயோ? அந்தத்ரிகோடிகா என்ற க்ஷேத்ரத்தில் ஸ்நானம்செய்து வைத்து என்னை பூஜிக்கவந்த அகஸ்த்யர் அவ்விடத்தில் அசரீரவாக்குக் கேட்டு த்ரிகோடிகா என்றபெயரினால் பூஜைசெய்தாரோ? அவ்விடம் த்ரிகோடிகை என அன்று முதல் சொல்லப்படுகிறது. அந்த ஸ்தானத்தில் நான் நித்யம் இருக்கிறேன்.

அவ்விதமே மங்களவம்சகம் என்ற இடத்திலும் ஜடாயு என்ற க்ஷேத்ரத்திலும் நித்யம் நான் இருக்கிறேன். வைத்யநாதம் என்றஇடத்தில் ஜடாயுனால் நித்யம் நான் பூஜிக்கப்படுகிறேன். அக்னீச்வரத்தில் நித்யம் இருந்துவருகிறேன். அவ்விதமே ச்வேதாரண்யத்திலும் சாயாவனத்திலும் நித்யம் பார்வதியுடன் இருக்கிறேன்.

காவேரியின் இருகரைகளிலும் அநேகம் க்ஷேத்ரங்கள் இருக்கின்றன. அவைகளில் சிலது என்னால் உனக்கு சொல்லப்பட்டது. காவேரியில் ஆதிமுதல் கடைசிவரையில் எவ்வளவு மணல்கள் காணப்படுகின்றனவோ? அவ்வளவு கரைகளிலும் லிங்கங்கள் என்னுடையது உள்ளது. அவை கள் என் உருவங்களே அதில் ஸந்தேஹமில்லை.

ஸ்ரீமத் வால்மீகம் என்றதிலும் ராமஸேதுவிலும் நித்யம் ராமர் என்ற பெயருடையவனாகி இருக்கிறேன், முன்பு முநிசாபத்தால்மநுஷ்ய உருவம் எப்பொழுது அடைந்தாயோ? அப்பொழுது தசரதருக்கு ராமராக அவதரித்து யுத்தத்தில் ராவணனை கொன்ற ப்ரம்ஹஹத்தி என்ற மஹா பாதகத்திலின்று விடுபட அவ்விடத்தில் ராமர் என பெயர் பெற்றீரோ? அங்கு எப்பொழுதும் நான் இருக்கிறேன். நான் ஸதா சிவஸ்வரூபத் திலே இவைகளில் இருக்கிறேன்.

இந்த புண்டரீக உருவமோ எனது உருவம். வேறு எங்கும் இல்லை. அவ்விடத்தில் எப்பொழுதும் நான் பரமானந்த ரூபமாகவே இருக்கிறேன். அவ்விடத்தில் இருக்கிற கல்கள் மணல்கள் தூளிகள் எல்லாம் எனது லிங்கங்கள். என் ஸ்வரூபமாகவே அவ்விடம் இருக்கிறது. அதில் ஸந்தேஹமில்லை. அந்த க்ஷேத்திரத்திற்கு மநுஷ்யர்களால் காணப்படுகிற ஜலமே சிவகங்கை, என்று முழுமையும் தெரிந்தவர்கள் அறிவார்கள். அந்த க்ஷேத்ரமத்தியில் பெரிய பர்வதம் ஒன்று காணப்படுகிறது. மூன்று கொடிமுடிகளுடன் சேர்ந்து பூமியில் மூழ்கினதாக காணும். வடக்கு தெற்கு மேற்கு மூன்று மலைகளும் ஸ்வர்ணமயமாகவே அங்கு காணும். எழுப்ரகாசமுடைய அது ப்ரம்ஹாண்ட அடிபாகத்தின் வளைவு உள்ளது. அதன் வடக்கு பாக கொடிமுடியில் லிங்கரூபமாக நான் இருக்கிறேன். ஆயிரம்தளம் ப்ரகாசமுடைய அதை மநுஷ்யர்களால் ஸதா தாமரைஸ்தான ஸ்வரூபமாகவே பார்க்கப்படுகிறது. ஸர்வ ஆதாரமுடைய வடவ்ருக்ஷத்தின் தெற்கு பாகத்தில் என்றைக்கும் அது காணும்.

அதன் அடிபாகம் முழுமையும் நான்கு புறமும் என் லிங்கங்கள் ஆயிரம் இருக்கிறது. அதன் தாமரை மத்தியில் மநுஷ்யர்களால் எந்த லிங்கம் பார்க்கப்படுகிறதோ? அது ஸர்வ ஜகத்திற்கும் மூலமாக ப்ரமாண்டத்திற்கு அடையப்பட்டுள்ளது. என் ஸ்வரூபம் ஸ்ரீ மூலஸ்தானம் என்ற பெயருடையது, அதில் ஸந்தேஹமில்லை. தேவர் அஸுரர் முனிகள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் கின்னரர்கள் கந்தர்வர்கள் உரகர்கள் சித்தர்கள் மநுஷ்யர்கள் முதலிய ஸர்வ ஜந்துக்களாலும் பூஜை செய்யப்படுகிறது. அவ்விடத்தில் நித்யம் நான் இருந்து வருகிறேன். அதற்கு கீழும் அநேக லிங்கங்கள் உள்ளது. மநுஷ்யர்கள் அறியமுடியாது. தேவர்களும் பூஜிக்கிறார்கள்.

மலையின் தெற்குபாக கொடிமுடியில் ஸ்வர்ணமய ஸபை ஒன்று உள்ளது. அங்கு சைதன்யம் ஸ்வர்ணமயம். பழமையானது எனச்ருதியே சொல்லுகிறது. என் மயமானது. அச்சபை சின்மயமாயுள்ளது. அதில் ஸந்தேஹமில்லை. அதினால் இது ஸ்வர்ணசபை என உனக்கு சொல்லப்படுகிறது. ஸ்வர்ணமய கொடிமுடியில் அச்சபை இருக்கிறது. அதை ஸ்வர்ணசபை என மநுஷ்யர்கள் அறியவேணும். ஸ்வர்ணத்தினால் செய்த சபையை முன்பு தேவர்களால் செய்விக்கப்பட்டது. அதினால் ஸ்வர்ணசபை என இதை மநுஷ்யர்கள் பூமியில் அறிகிறார்கள். பரப்ரம்ஹமான என் ஸச்சிதானந்தஸ்வரூபம் என கண்டு களிக்கும் ஹேது. எனவே அது ஆனந்தசபை என ஆயிற்று.

சின்மயமாயுள்ள அச்சபையை என்னுல் சித்சபை என சொல்லப் படுகிறது. சின்மயமாக உள்ள நான் மற்ற க்ஷேத்ரங்களில் எனது அம் சங்களையே அடைந்து உள்ளேன். ஆகவே சின்மயமாக உள்ளது எல்லாவற்றிலும் இது விசேஷம். ஆகையால் அவ்விடம் எப்பொழுதும் அதிகப்ரகாசம் எனக்கு இருக்கிறது. வேறு இடத்தில் எங்கும் இம்மா திரி இல்லை. அவ்விடம் ஸ்வராட்தேவருடைய ஹ்ருதயம் என சொல்லு கிருர்கள். அதில் ஸந்தேஹமில்லை. வேறு க்ஷேத்ரங்களில் இம்மாதிரி இல்லை. ஆகையால் இவ்விஷயம் சொல்லப்படுகிறது. புண்டரீகபுரமும் ஸ்வர்ணபர்வதமும் ப்ரளயத்தில் கூட நாசமடைகிறதில்லை. ஆகையால் அது ஸ்வர்ண, ஸபை என சொல்லப்படுகிறது. என் ஸ்வரூபத்திற்கு நாசம் காணப்படுமேயானுல் அப்பொழுது உலகிற்கேநாசம். வேறு வித மாய் நாசம் இல்லை. சிவகங்கை என பெயரிய தீர்த்தத்தில் தெற்கு கரை யில் என்னை பாமானந்தரூப மேற்குபாகத்தில் பார்வதியுடன் நர்த்தனம் செய்கிற சித்ஸபையை. ஒருதடவை பார்த்தவுடன் உடனே முக்தி அடை கிருன். பர்வதத்தில் உள்ள. கொடிமுடி மேற்கு பாகத்தில் முனிகள் சித்தாள் சாரணர் தேவதைகள் என்னை நித்யம் பூஜித்து இருக்கின்றனர்.

வ்யாசர் :—இவ்வார்த்தையை விஷ்ணு கேட்டு ஈசனை நமஸ்கரித்து ப்ரார்த்தித்து சொன்னுர்.

விஷ்ணு —உமது க்ஷேத்ரங்களில் எப்பொழுதும் உமது அநுக்ர ஹத்தால் நான் இருக்கிறேன். இந்த உத்தம ஸர்வ க்ஷேத்ரங்களிலும் உயர்வான புண்டரீகபுரத்தில் நர்த்தனம் செய்கிற உம்மை ஸதா. இச்சிக் கிறேன். அநுக்ரஹமில்லாமல் மநுஷ்யர்கள் தேவர்கள் முதலானேர் மனதினுலும் உமது க்ஷேத்ரத்தை அடைய சக்தி இல்லை. உமது பக்த ஞன எனக்கு உன்தாண்டவத்தையே ஸதாபார்க்க அநுக்ரஹம் செய்யும்.

வ்யாஸர்—என தெரிவிக்கப்பட்ட நாராயண பக்தனை க்ருபையால் பார்த்து ஈசன் சொன்னுர்.

ஈசன்—உம்மால் எது ப்ரார்த்திக்கப்பட்டதோ? அது இன்றைக்கு ஆகப்போகிறது. நித்யம் என் பாவத்துடன் சேர்ந்து நீர் பக்தர்களுடன் முதன்மையாகுக. என் பக்தர்கள் எதை இச்சிக்கிருர்களோ? அது மூவுல கங்களிலும் கிடைக்கமுடியாத அடைதல். அப்படியே அது சித்தமாகட் டும் என நீ அறி. ஒரு ஸமயமும் வேறு விதமாகாது. அப்படி இருந் தும் என் பக்தர்கள் ஒன்றையும் இச்சிக்கமாட்டார்கள். என்னையே நித்யம் தியானிப்பவர்களாயும் கீர்த்தனம் செய்பவர்களாயும் என்பக்தர்

கள் கடக்க முடியாததை இச்சிப்பவர்களானால் கொஞ்சமேனும் அவர் களுக்குகுறைவில்லே. அதையே ஸாதிக்கச்செய்கிற அவ்விரதம் ஸதா என க்கு உள்ளது. பக்தர்கள் எல்லோர்களிலும் நீ உயர்ந்தவன். ஆகையால் கஷ்டப்பட்டது இன்று உனக்கு ப்ரஸாதம்போல் உண்டாகப்போகிறது. ஆகையால் இப்பொழுதே என் புண்டரீகம் என்ற பெரிய பட்டணத்தை நீ அடையப்போகிறாய். எனது பக்தி உள்ளவர்கள் எப்பொழுதும் ஆனந்தத்தாண்டவத்தை பார்க்கப்போகிறார்கள். மலேயின் மேற்கு பாக கொடி முடியில் தேவர்கள் இருக்கின்றனர். அவ்விடம் தேவர்களுடன் தேவேச்வர தன்மை அடை. அந்த ஆனந்த ஸபாமத்தியில் ஆனந்த நர்த்தனம் செய்கிறேன். அவ்விடத்தில் பக்தியுடன் சேர்ந்து நீ என்னே பார்க்கப்போகிறாய்,

நான் ஸபாமத்தியில் பரமானஸாகரத்தில் மூழ்கி வேறு ஒன்றை யும் அறியமாட்டேன். நான் எப்பொழுதும் தனது ஸ்வரூப அநுக்ரஹ நர்த்தனம் செய்கிறேன். ஆகையால் அந்த பட்டணத்தை காப்பாற்று தலில் உனக்கு நிருபிக்கப்பட்டது. ஆதி வ்யாதி பயம் திருடு புலி இப்பயங்களிலிருந்து அரசர் பாபம் துர்விஷயம் இவைகளிலிருந்து ஸதா பட்டணத்தில் பக்தர்களுக்கு விசேஷமாக நீ காப்பாற்றுதலே செய்.

வ்யாஸர்—இவ்விதம் சிவனால் சொல்லியதை விஷ்ணு பக்தியுடன் அடைந்து அடிக்கடி ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் செய்து அவரது தாமரை போன்ற இருகால்களே சிரஸில்வைத்து தன்மயமாகி ஆனந்தக்கண்ணீர் விட்டு மயிர்க்கூச்சல் அடைந்த சரீரத்துடன் தங்கு தடங்கல் வார்த்தை யுடன் ஈசனே பார்த்து நன்கு சொன்னார்.

விஷ்ணு—க்ருதார்த்தனாகி அநுக்ரஹிக்கப்பட்டவனாகிறேன். உம் அநுக்ரஹத்தால் ஆனந்த நர்த்தனம் காணப்போகிறேன். மற்றும் உம் மால் ஏவப்பட்டணத்தை காப்பதில் நான் இருக்கப்போகிறேன். மூன்று ஜகத்திலும் இவ்விடம் மிகவும் ஸாரமுள்ளது. ஆகையால் இதைகாப்பாற்ற இப்பொழுதே ஏவப்பட்டு இப்பட்டணத்தை நான் காக்கப்போகிறேன்.

வ்யாஸர்:— எனசொல்லி, பகவான் விஷ்ணு ஜகத்திற்கு ஈசனான சிவனே பக்தியுடன் இந்த்ரிய நிக்ரஹம் செய்த மனதுடன் ஸ்தோத்ரம் செய்தார்.

விஷ்ணு:— தேவதேவரும், கருணாகரரும் பார்வதி நாயகரும் பக்தவத்ஸலனும் ஸர்வஜந்துக்களுக்கும் போக மோக்ஷங்கள் கொடுப்பவரும் வேதவேத்யரும் சந்த்ரனே சிரஸில் உடையபரமானந்த உருவமும் யானேத் தோலே வஸ்த்ரமாக உடையவரும் விபூதிபூசிய உருவத்ரிபுராரியும் ஸர்வ

பூதங்களுக்கு ஆத்ம உருவரும் மன்மதனை எரித்தவரும் மங்கள உருவ பாம்பைஅலங்காரமுடையவரும் உள்ளசரணமடைந்த என்னைகாப்பாற்றும்!

வ்யாஸர்:— என இவ்விதம் விஷ்ணு ஸ்தோத்தரித்து நமஸ்கரித்து விடைபெற்று புண்டரீகபுரம் வந்தார். இன்றைக்கும் புண்டரீகபுரத்தில் விஷ்ணு ஸர்வஜந்துக்களால் பார்க்க ஈசனது தெற்குபாகத்தில் காணப் படுகிறார்.

அவ்விதமே சித்ஸபைமத்தியில் ஸ்வயம்தேவராக நான் எப்பொழுதும் இருக்கிறேன். கைலாஸம் முதலிய மற்ற இடங்களில் என்னுடைய அம்சங் கள் இருக்கிறது என எது உன்னால் நன்கு கேட்கப்பட்டதோ? அதையே நான் உனக்கு சொன்னேன்.

ஜைமினி—இவ்விஷயத்தில் நீ ஸந்தேஹமடையவேண்டாம். இவ் விஷயம் என்னால் உனக்குத்தான் சொல்லப்பட்டது. ஸமஸ்த வேதாந்த சிரவில் இது மறைந்துள்ளது. இதற்குமுன் நான் ஒருவனுக்கும் சொல்லியதில்லை. பக்தனை உனக்குமட்டும் என்னால் இப்பொழுது சொல்லப்பட்டது.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

எட்டாம் அத்தியாயம்.

இவ்விதம் ஜைமினிக்கு சொல்லி பட்டணவைபவத்தை நினைத்து நினைத்து மறுபடியும் முனி சொன்னார்.

வ்யாஸர்— ஆச்சர்யம் அற்புதமுள்ளது. இந்த ஜனம் கையில் விளக்கு இருந்தும் பெரிய பாழடைந்த கிணற்றில் விழுகிறது போல் அடைகிறது கஷ்டம். இதைகண்டு நன்கு பார்க்கட்டும். கீழேவிழுகி றான். யாருக்கு சொல்வேன். அவனுக்கு கீழேதள்ளுவதையே மறுபடி செய்கிறேன். வேதபுராண ஸகல ஆகமங்களில் பட்டணவைபவத்தை இந்த மூடபுத்தி. உள்ளவர்கள் கண்டும் அறிகிறார்களில்லை. கஷ்டம் அவர்களே, சோதிக்கத்தகுந்தவர்கள் உங்களைப்போல் ம்ருகத்தன்மை அவர்களுக்கு இல்லை. பாபமுள்ள மநுஷ்யர்களைகண்டு இவ்விடம் நான் துக்கப்படுகிறேனில்லை. இம்மநுஷ்யர்கள் ஸபாபதி மஹிமை அறிந்து மூழ்குகிறதில்லை. அறிகிறதுமில்லை. சாஸ்த்ரங்களை படிக்கின்றனர்.

யஜ்ஞங்களை செய்கின்றனர். தீர்த்தங்களை சுத்திசெய்கின்றனர். ஆச்சர்யம். இந்தப்பட்டண மஹிமையை பார். ஆனால் அறிகிறார்களில்லை. பட்டண மஹிமையே அது. ஸபையில் நர்த்தனம் செய்யும் ஆதிதேவரான பரமேச்வரப்ரபுவை நாயை சமைத்து சாப்பிடுகிறவன் பார்த்தாலும் உடனே முக்தி அடைகிறான். இப்பட்டணத்தை ஜனங்கள் அறிகிறதில்லை.

நானும் ஸ்வர்க்கலோக லக்ஷ்மியை இச்சிக்கிறதில்லை. விஷ்ணு லோகலக்ஷ்மியையும் இச்சிக்கிறதில்லை. புழு, பூச்சிகள் நிறைந்த லக்ஷ்மி போன்ற இப்பட்டணத்தையே நான் இச்சிக்கிறேன். கண்ணில்லாத மநுஷ்யர்கள்கூட எக்காரணம் பற்றியோ தாண்டவத்தை பார்க்கின்றனர் நல்ல கண்ணுடைய பகவான் பதஞ்சலி நர்த்தன ஈசனை ஸதாபார்க்க போகிறார். இந்த மூன்று உலகங்களிலும் எவன் எப்பொழுதும் சைவ தாண்டவத்தை பார்க்கிறானோ? அவன் க்ருதார்த்தனாகி இவ்வுலகில் அவனது ஜன்மாவை ஸாபல்யமடைய செய்யும். மற்ற மநுஷ்யர்கள் எல்லாம் களிமண்பூமியில் உண்டானவர்கள். வினயமுள்ள யஜ்ஞங்களால் என்னப்ரயோஜனம். நல்லவிபூதியினால் நல்ல ஜபாதிகளால் என்னப்ரயோஜனம். ஸபையில் சங்கரரை பார்த்தவனுக்கு இவைப்ரயோஜனமில்லை. அவருடைய புத்தி நல் ஒழுக்கம் தர்மம் குணம் பொருமை தீர்த்தபூஜை சுத்ததன்மை ஜன்மா இவைகள் எல்லாம் இருந்தாலும் நிந்திக்கத்தக்கதே. அவருடைய தானம் அதிக சிநேகம் பணப்பெருக்கு தாக்ஷிண்யம் பெருந்தன்மை இவைகள் ஸபையில் ஸபாபதியை பார்த்த மநுஷ்யர்களுக்கும் நிந்திக்கதன்மையே, பார்த்த மநுஷ்யனே வித்வான், பண்டிதன் முநி பூஜிக்கதகுந்தவன். சங்கரனுக்குப்ரியமுள்ளவன். இவை உள்ளநர்த்தன ஈசனை எவன் காண்கிறானோ? அவனே க்ருதார்த்தமுள்ளவன், ஆச்சர்யம் மநுஷ்ய உலகில் மநுஷ்பசரீரமுடையவர் பதஞ்சலி, கண்ணுடையவரும் அவரே. அஞ்சலி சிரமுடையவராய் பார்த்தவர் பதஞ்சலி. பதஞ்சலியின் தபஸ்பலமடைந்தது. வேதம் தரித்த பலமடைந்தது. இஷ்டமான யஜ்ஞ பலமூலமே அடையப்பட்டது. வேதார்த்த ஜ்ஞானங்களை அறிந்தவர். வேதாந்தத்தில் இருந்தவர். யோகத்திலேயே முதன்மையான நிஷ்டை அடைந்தவர் எல்லாம் பதஞ்சலியே.

சிவப்ரஸாதம் தேவப்ரஸாதம் எல்லாம் பதஞ்சலி அடைந்தவர். க்ருதார்த்ததன்மை உண்மைதன்மை இவை முதன்மை ஜ்ஞானம் என எந்ததேவர் உலகிற்கு காண்பித்தாரோ? அவரேபதஞ்சலி ஆச்சர்யம்! பெரிய தன்மையை வ்யாக்ரபாத முனியும் அடைந்தார். பெயரினால் ப்ரஸித்தி பெற வ்யாக்ரபுரம் என இன்றைக்கும் சொல்லப்படுகிறது. இன்றைக்கும்

அவரே குரு. ஜகத்குருவான இவரை தாயார் சரீரத்தில் தாங்கினாள். அவளுடைய பாததூளியை சிரஸில்தான் நமஸ்கரிக்க யோக்யம். எனக்கும் அவர் தாயார் தன்மையே அடைவிக்கும் அவளே பெரிய முதன்மை அடைந்த புத்ரி. இந்த பதஞ்சலி யானைபோல் உள்ளவர். கடுமையான தபஸ் செய்து குறைவில்லா அனுபவத்தினால் அவரை புத்ரனாக அடைந்தாள். எக்காரணத்தால் ஈசன் ஸபாபதி இவ்விடம் மாம்சகண்ணால் பார்க்கப்பட்டாரோ? அதைகாட்டிலும் வ்யாக்ரபாதர் க்ருபைக்கு முதன்மையான இருப்பிடம் வேறுயார் அடைவர். க்ருபைக்கு முதன்மையான வ்யாக்ரபாதர் பதஞ்சலி இருவர்களுக்கும் இவ்விடம் க்ருதார்த்ததன்மை கண்டது. இவர்கள் இருவருக்கும் பகவான் ஸபாபதி நல்ல ஜன்மாவினால் அவர்களுக்கு பார்க்க செய்வித்தார்.

புராணம், வேதம் ஸ்ம்ருதிகளது ஸத்யகார்யமே இது. மஹாத்மாக்களினால் இப்பட்டணம் நன்கு பூஜிக்கப்பட்டது. இவ்விதமறிந்தும் ஸம்ஸார பந்தங்களில் மோதிய மநுஷ்யர்கள் இதை அறியமாட்டார்கள். உத்தமக்ஷேத்ரம் தேவர் தீர்த்தம் இவை மூன்றும் உள்ள இவ்விடத்தை விட்டு மநுஷ்யர்கள் முக்திக்காக வேறிடம் எங்கு செல்வார்களானாலும் அம்மனுஷ்யர்கள் மூடர்கள். சோழதேச பூமியின் முக்யப்ரதேசத்தில்உள்ள ஸபாபதியை ஒருவன் கண்ணால்பார்த்த மாத்ரத்தாலும் அவ்விடம் இருந்து யஜ்ஞம் முதலியன செய்தலாலும் பலனை அடைகிறது. அந்த பட்டண வர்ணனையே என்னை சொல்லுகிறது. பழமையான தேவர்கூட சொல்ல முடியாது. மஹேச்வரனின் ஸ்வருபத்தைஸேவிக்கும் ச்ருதிசொல்லுகிறது.

ஸத்சித் ஸுகஸமுத்ரன் பரமேச்வரன் அவர் தாமே க்ஷேத்ரஉருவமாயிருக்கிறார். ஆச்சர்யம் இங்கு வஸிக்கும் மநுஷ்யர்கள் பசு, பன்றி மரங்கள் எல்லாம் க்ருதார்த்ததன்மை அடைந்ததே. நித்யம் இந்த உத்தம க்ஷேத்ரத்தில் எவர்கள் வஸிக்கிறார்களோ? நமஸ்கரிக்கிறார்களோ? அவ்விடத்தில் அவர்கள் பாததூளி என்சிரஸில் கிடைக்கட்டும். அப்பட்டணத்திலுள்ள இளம்சந்த்ரனை அலங்காரமுடைய ஈச்வரனது தாமரைப்புஷ்பம் போல் சிவந்த பாதங்களை பார்த்ததும் அநேக ஜனங்கள் உடனே முக்தி அடைகின்றனர்.

எங்கு ஸாக்ஷாத் பதஞ்சலி அதிகடுமையான தபஸ் செய்து எந்த மஹேசனை உலகிற்கு ஹ்ருதயஸ்தானமாக தேவிக்கு காண்பித்தாரோ? மஹாதேவரது ப்ரஸாதத்தால் சப்த சாஸ்த்ரத்தை ஸ்திரமாகசெய்தாரோ? ஸ்வர்ண ஸபையில் வ்யாக்ரபாதர் கடுமையான தபஸ்செய்து பார்த்தாரோ? தேவரைப்பார்த்து பரமான சித்ஸுக ஸமுத்ரத்தை தனது கோத்ரபயனாக

விடுவித்து உபமந்யு ஸ்ரீமூலநாதமஹேச்வரனிடமிருந்துவரமடைந்தாரோ? க்ருஷ்ணன் உருவமடைந்தவருக்கு அவ்வுபமன்யு ப்ரியதீக்ஷை செய்வித்தாரோ? பசியுடைய அப்பக்தன் குழந்தைக்குபால்ஸமுத்ரம்கொடுத்தாரோ? எம்முனி ஜகத்குருவாக உலகில்உள்ளவரோ? அவரேசிவனுக்குப்ரியமானர்.

அந்தகுலத்தில் உண்டான எல்லா முனிகளும் தேவிக்கு ஸமான தெய்வம். நீயே மூவுலகிலும் க்ருதார்த்தமுள்ளவன். பரமேச்வரபட்டணத்தை பார்க்கப்போகிறாய்! அவ்விடம் பக்தி அதிகமாகவே காண்கிறது. வேறு என்னகார்யம் இருக்கப்போகிறது. அந்த சிவகங்கை எனப்பெயரிய உத்தமதீர்த்தத்தை கண்டு எப்பொழுது அபிஷேகம் செய்யப்போகிறேன். சங்கரனுன ஸ்ரீ மூலஸ்தானநாதரையும் மஹேச்வரனையும் வடவ்ருக்ஷத்தில் இருக்கும் தக்ஷிணமூர்த்தியையும் எப்பொழுதுகாணப்போகிறேன். சிவந்த தாமரைபோன்றகாலுடைய ஆனந்தமூர்த்தி சபாபதியை நான்எப்பொழுது பார்க்கப்போகிறேன். சிவனுக்கு இடதுபாக மடைந்த மங்களம் செய்யும் தேவி என்கண்களுக்கு தெரிகிறதாக எப்பொழுது பார்க்கப்போகிறேன். எனக்கு அந்த தேவர், தேவி இருவர்களும் மநுஷ்யர்களுக்கு மங்களத்தை கொடுப்பவர்களோ? அவர்கள் எப்பொழுது கண்ணுக்கு தெரிகிறார்களோ? அப்பொழுதுதான் எனக்கு பாசகட்டு அறும். நான் பரமானந்த சரீர முடையவனுகி எப்பொழுது ஆகுவேன்.

ஸம்ஸார ஸர்ப்பத்தினுல் ஜெயிக்கமுடியாது காம அக்னி. கொல்லப்பட்ட என்னை ஈசன் எப்பொழுது பார்க்கிறாரோ? அப்பொழுதுதான் அம்ருதவர்ஷமுடைய தனது கடைக்கண் பார்வையை மங்களருபமாக அளிப்பார். நான் பார்வதியால் பார்க்கப்பட்டதும் ஸபாபதியின் தாமரை போன்ற இருகால்களையும் ஸதா எப்பொழுதும் பார்ப்பேன். இளம் ஸூர்ய ப்ரகாசமுடைய குளிர்ந்த சந்த்ரன்போல் ஸம்ஸார தாண்டுதல் ஒரேநிதி என எப்பொழுது மநுஷ்யர்களுக்கு உண்டாகும்? புலித்தோல் அலங்காரமும் பாம்பு ஆபரணமும், மனோஹர புஷ்பமாலை மார்பிலும், விபூதி அலங்காரத்தினிடையில் ஸர்ப்பமும் அக்னிடமருகம் இவைகளை வஹிக்கும் உமது நர்த்தன கடாக்ஷம் எனக்கு உடனேகொடும்!

ஆலஹாலவிஷத்தால் அலங்கரித்த கழுத்தும் பார்வதியின் கடைக்கண் போன்ற வண்டுகளால் ஸேவிக்கும் அழகிய தாமரைபோன்ற முகப்ரகாசமும் எனக்குகொடும்! ஸதா அம்ருதத்தில் மூழ்கிய மநுஷ்யர்களுக்கும் தேவர்களுக்கும் முக்யநாயகரான அவரைநான் எப்பொழுது மனோஹரமாய் பார்க்கப்போகிறேன்? அதிக க்ருபா பாரத்தினுல் மநுஷ்யர்களுக்கு ஸம்ஸார நாசம் செய்யும் இடதுபாகம் இடதுகால் இடதுகண்

இவை உடைய ஈசனை எப்பொழுது பார்க்கப்போகிறேன் உமக்கு நமஸ்காரம் செய்தல் க்ருதார்த்த மாக்குக!

வ்யாஸர்:— இவ்விதம் எனதுகுரு சொல்லி ப்ராம்ஹணர்கள் தேவர்கள் எல்லோரும் ஸபாபதியை நினைத்து தன்மயமானார்கள். ஆனந்த ஸமுத்ரத்தில் மூழ்கிய அவர்கள் வேறு ஒன்றையும் அங்கு அறியவில்லை. வ்யாஸரை அவ்விதம் ஜைமினி நினைத்து பேசாமல் மறுபடி விஷயத்தை கேட்க ஆசைஉடையவரானார். ஆத்மமயமாக முஹூர்த்தகாலம் பகவானை நினைத்து ஸ்தோத்திரங்களினாலும் ஸ்தோத்தரித்து மறுபடியும் ஜைமினி மயிர்க்கூச்சல் அடைந்து ஆனந்தக்கண்ணீர் விடுபவராகி கேட்டதும் ஜைமினியை பார்த்து இவ்வார்த்தையை சொன்னார்.

வ்யாஸர்:— இப்பொழுது உனக்கு ஸர்வவேதாந்தங்களும் என்னால் சொல்லப்பட்டது. தத்ரூப ஸபாநாதரை பார்த்த ஜந்து உடனே முக்தி அடையும் என்பதினால் ஸந்தேஹமில்லை. ஆகையால் நீ ச்ரத்தையுடன் புண்டரீகபுரம் அடை. ஸத்ரூபநாதரை பார்த்து நீயும் முக்திஅடையப் போகிறாய். எவன் இந்த அத்தியாயத்தை தினமும் என்னிடம் பக்தியை உண்டாக்கும்படி படிக்கிறானோ? அம்மநுஷ்யன் க்ஷேத்ரபாவமடைகிறான். அதை விசாரிக்கவேண்டியதில்லை. எவன் வ்யாக்ரபுரத்தில் தேவரைப்பார்க்கிறானோ? தினம் இவ்வத்தியாயத்தை படிக்கிறானோ? அவனது விக்னங்கள் எல்லாம் தொலையும்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஜைமினி:— அப்பட்டணத்தின் மஹிமையை அடிக்கடி கேட்டும் எனக்கு இன்னும் அதிக தாபமுள்ள ஆசையே விளங்குகிறது.

வ்யாஸர்:— வேறு இடத்தில் இருந்து புண்டரீகபுரத்தில் வீடோ, நிலமோ சிவபக்தர்களுக்கு முக்யமாக கொடுப்பானேயாகில்; அவன் சிவலோகமடைகிறான். அதுவிஷயத்தில் முன்நடந்த வ்ருத்தாந்தம் ஒன்று சொல்கிறேன்.

முன்பு ஒரு மஹாபாபி துர்தர்சன் சாபத்தினால் கொடுமைத்தன்மை என அறிந்தும் விந்த்யபர்வதத்தில் வஸிக்கிறவனாகி வருகிறவர்களின் பணத்தை அபஹரிக்கலானான். அவன் ஒருஸமயம் ஒருப்ராம்ஹணனைப் பார்த்து கையில் கத்தியுடன் திகைக்கிறவன்போல் பின்தொடர்ந்தான்.

யமன்போலுள்ள அவனை அவர்பார்த்து துஷ்டசித்தை அடைந்தார். ஆச்சர்யம் இப்பொழுதெனக்கு விந்த்யபர்வதத்தில்யமபாதை வந்துள்ளது. கஷ்டம்! ஈசனே இப்பொழுது நான் என்னசெய்வேன்! என எண்ணி கண்ணீர் பெருக கலங்கி அவன் காலில் விழுந்தார். ஆனாலும் ஜன்மாந்தரத்தில் செய்த மஹாபுண்ய பலத்தால் ஏவப்பட்ட அவன் ஜாதியால் க்ரூரனாயிருப்பினும் ப்ராம்ஹணனிடம் க்ருபையுடன் சரீரம் முழுதும் நடுங்கிபயத்துடன் அவனைப்பார்த்து துக்கத்துடன் கலங்கி பதில்வார்த்தை சொன்னான்.

கஷ்டம் அதிக துக்கமடையும் உன்னை கொல்லவில்லை. எழுந்திரு! எவ்வளவு உன்னிடம்இருக்கிறதோ? அவ்வளவும் எனக்குகொடு என்றதும் அவன் ஸந்தோஷமாக எழுந்திருந்து கௌபீனம் தவிர எல்லாவற்றையும் கொடுத்தார். மறுபடியும் அவனை நமஸ்கரித்து யாசித்தான்.

ஸூர்ய கிரணங்களால் அநேக தேசங்களை கடக்க இக்குடையை மட்டும் நான் கொண்டுபோகிறேன். அதைமட்டும் திருப்பிகொடு உனக்கு நமஸ்காரம். இவ்விஷயத்தில் சூர்ய கிரணகஷ்டத்தை தாண்டி தூரதேசங்களை நான் செல்லவேண்டும். குடை இல்லாமல் க்ஷணிககாலம் இருந்தால் நான் கட்டாயம் நாசமடைவேன். அதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் கருணை செய்து அதை எனக்குகொடு.

வ்யாஸர்:— இவ்விதம் வெகுவிதமாக கேட்டதும் கருணையுடன் அவனுக்கு குடையை கொடுத்தான்.

அவனும் அதிகப்ரீதி அடைந்து ஸஞ்சரித்தான். அவர்கள் ஒரு ஸமயம் புண்டரீகபுரமடைந்தனர். அவ்விடம் ஒரு அடிப்ரவேசித்ததாலும் சிவனுக்கு ப்ரியமுள்ளவனே. வெகுதூரத்தில் வருகிற ஸந்யாஸியும் கொடுமையான வழியில் பீடிக்கப்படுகிறவனும் உலர்ந்த நாக்கு உடையவரும் சுருங்கிய முகமுடையவரும் வயதானவரும் பசியோடு கூடியவரும் உள்ள ஒருவரை அங்குகண்டான்.

நிழலை இச்சிக்கும் ஜகத்குருவான ஈசபக்தர் மஹாத்மாவை எதிர்ச்சையாக அவன்கண்டு சமீபமடைந்து நமஸ்கரித்து கஷ்டப்படும் அவருக்கு குடையினால் வெய்யிலைதடுத்தான். அந்தயதீச்வரரும் பெருமூச்சுவிட்டு ப்ராணனை அடைந்தார். துர்தர்சன் என்றவேடன் கொஞ்சகாலம் கழித்து அங்கு இறந்துபோனான். உடனே அவன் சிவபுரம் அடைந்தான். இது ஸத்யமாக உனக்கு என்னால் சொல்லப்பட்டது. முனியே பாபஸமாசாரமுள்ள கொடுமையான வேடன் அங்கு ஒருபாபமும் செய்யவில்லை.

ஒரு ஸமயமும் அங்கு நடக்கவில்லை. அவனால் தர்ம வார்த்தையும் சொல்லவில்லை.

அப்பாபிக்கு புத்தி இல்லாமல் இருந்தும் குடையை கொடுத்து வெய்யில் தடுக்கப்பட்டதினால் பாபியான அவனும் சிவலோகமடைந்தான். க்ஷேத்ரவைபவத்தைப்பார். புண்டரீகபுரத்தைப்பற்றி ஒரு ஸமயமும் காதில் இம்மாதிரி கேட்டதில்லை. ஸபேச தர்சனத்தைஒட்டி அந்ததுர்தசனனுக்கு எப்படி இது உண்டாகும். மஹா க்ஷேத்ரமடைந்த வைபவத்தால்தான் நல்லஸ்தானம் அடைந்தான். எவன் இம்மாதிரி ஸந்தோஷமாக புண்டரீக புரத்தில் ச்ரத்தையுடன் கல்வீடோ, அல்லது மடமோ, சிவபக்த வேதாத் யயனமுள்ள ப்ராம்ஹணனுக்கு கொடுப்பானேயாகில்; அவனுடைய புண் யத்தை நான் அறியேன்.

ப்ரம்ஹா, விஷ்ணு தேவதேவர் ஸ்கந்தர், தேவி இவர்கள் அறிவார் களோ இல்லையோ? பக்தருக்கு இல்லாதிருப்பினும் ப்ராம்ஹணனுக்கு தானபலன் என்னவெனில்; இப்புண்டரீகபுரத்தில் என்விஷயத்தை கேள் அந்தகுளத்தில் எவ்வளவு மணல்கள் இருக்கிறதோ? அவ்வளவு ஆயிரம் கல்பங்கள் சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். அப்படியே அன்னதான மும் மோக்ஷமும் உடையது என நீ அறி.

பக்தியினாலோ, பக்தி இல்லாமலோ; இவ்விடம் ஸந்தேஹமின்றி முன்பு ஒரு யோகி சிவபக்த ப்ராம்ஹணர் இப்பூமி முழுமையும் சுற்றி கடைசியாக புண்டரீகபுரமடைந்தார். அவ்விடம் பெரிய வீதியில் இளைப்பாறி தூங்குகிறவனார்.

அக்காலத்தில் ஒரு காக்கை மூக்கில் ஒரு அன்னத்தை எடுத்துக் கொண்டு வேகமாக ஆகாசத்தில் போகுகையில்; அதன் மூக்கினின்று விழுந்த அன்னம் தூங்குகிறவன் திறந்தவாயில் விழுந்தது. கெட்டியாக விழுந்தமாத்ரத்தில் அக்காகமும் புண்யமாத்ரத்தால் இறந்து சிவபுரமடைந் தது. ஞானமில்லாமல் துளிஅன்னம் விழுந்ததால் அக்காக்கையும் சிவபுர மடைந்தது. எவன் ச்ரத்தையினால் பக்தியுடன் ப்ராம்ஹணனுக்குதீர்த்தம் அன்னம் ஸத்காரங்கள் ஸத்தாகவோ அஸத்தாகவோ செய்வானேயாகில்; அவன் புண்யத்தைப்பற்றி நான் அறிகிறேனில்லை. சங்கரர் அறிவாரோ அறியமாட்டாரோ? இவ்விதத்தில் தரித்திரனோ பணக்காரனோ இவ்விரு வர்களுக்கும் அன்னதானாதி பலங்களில் மாறுதல் உண்டு. பணக்காரன் ஆயிரம்பேர்களுக்கு அன்னம் கொடுப்பானேயாகில், தரித்திரன் ஒருபிடி அன்னம் கொடுப்பானேயாகில், அவ்விருவர்களுக்கும் புண்யம் ஸமமே. பணமுள்ளவன் ஒருபிடி தானம் செய்தால் அவ்விதபுண்யம் அடைய

மாட்டான். தரித்திரனுக்கு என்ன விதியோ அது ஸர்வதானங்களுக்கும் விதி. இவ்விடத்தில் ஒருபிடி தானம் செய்வதானல் பணமுள்ளவனுக்கும் எந்தபலன் அடையமுடியுமோ? அவ்விதமே தரித்ரனுக்கும் உள்ளது. வேறு இடத்தில் வெகு தானம் செய்தாலும் அதைஅடைய முடியாது. கோதானம், பூதானம் கன்னிகை தானம் வீடுதானம் தான்ய தானம், வெள்ளிதானம் எள்ளுதானம், பவுன்தானம் வஸ்த்ரதானம் யானைநிழல் தானம் குடைதானம் பாதுகைதானம் இதுமுதலான அநேக தானங்கள் ஸந்தோஷமாக புண்டரீகபுரத்தில் சிவபக்தர்களான ப்ராம்ஹணர்களுக்கு விசேஷமாக கொடுப்பதினுல் சிவலோகமடையஹேது. அதுவிஷயத்தில் ஸந்தேஹமில்லை.

மற்றும் அன்னதானம் பூதானம் விசேஷமாக இவை சிவனுக்கு ஸந்தோஷமாக கொடுக்கக்கூடியது. சிவபக்தனுள்ள ஸந்யாஸிக்குஇஷ்டம் போல் கொடுத்து ஸர்வபாபங்களினின்று விடுபட்டு சிவ ஸாயுஜ்யம் அடையலாம். குடையோ பாதுகையோ வஸ்த்ரமோ அரைஞான்கயிரோ ஜலபாத்ரமோ; தண்டமோ மான்தோலோ ருத்ராக்ஷமாலையோ மண் பல் குச்சி சந்தனம் புஷ்பம் தீர்த்தம் மோதகம், பதார்த்தங்கள் பாயஸம் பக்ஷ்யம் முதலிய இவைகளை கொடுப்பானேயாகில்; அவன் சிவபுரமடைகிருன். அது விஷயத்தில் ஸந்தேஹமில்லை.

சிவனுடையசாஸ்த்ரத்தைஎழுதி எவன்சிவயோகிக்குகொடுக்கிருனே? அவனே பக்திஉள்ளவன். திருவாதிரையில் அதை செய்வானேயாகில்; அவன் சிவஸாயுஜ்யமடைகிருன். சிவனுடைய சாஸ்த்ரத்தை எழுதுதற்கு எவன் பனைஓலை கொடுக்கிருனே? அப்பக்தனுக்கு சிவலோகமடையப்படுகிறது. சிவன் ஸம்பந்த புஸ்தகத்தை எழுத நூல் மஷி எழுதுகோல் இவை புஸ்தகத்தை காக்கக்கூடியது கொடுப்பானேயாகில்; அவனும் சிவபுரம் அடைகிருன். மற்றுமுள்ள சிவசாஸ்த்ரத்தை ராஜாங்க கஷ்டத்தில் காப்பாற்றி பிறகு திருப்பிக்கொடுப்பானேயாகில்; சிவஸாயுஜ்யமடைகிருன் சிவசாஸ்த்ரத்திற்கு உபயோகமுள்ள மற்றவைகளை எவன்கொடுக்கிருனே? அவன் ஸர்வபாபங்களினின்று விடுபட்டு சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிருன். பக்தியுடன் சிவலோகத்தை அடைய சிவலிங்கத்தை ப்ராம்ஹணர்களுக்கு கொடுப்பானேயாகில் அவன் சிவஸாயுஜ்யமடைகிருன்.

அது விஷயத்தில் ஸந்தேஹமில்லை. பூஜைக்கு உபயோகமுள்ள வஸ்துவை சிவயோகிக்கு கொடுப்பானே யாகில் ஸர்வபாபங்களினின்று விடுபட்டு சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிருன். சுத்தமான விபூதியை

யாசித்து இவ்விடத்தில் சிவயோகிக்கு கொடுப்பானேயாகில் ப்ரம்ஹ ஹத்தி முதலிய பாபங்களினின்று விடுபட்டு மோக்ஷமடைகிறான். பக்தியுடன் ப்ராம்ஹணனுக்கு சிவலிங்கத்தை கொடுப்பானேயாகில் அவன் பார்வதிலோகமடைகிறான். ஸாளக்ராமத்தில் உண்டான சக்ரத்தையோ த்வாரகையில் உண்டான சக்ரத்தையோ கொடுப்பானேயாகில் விஷ்ணு லோகமடைந்து வரிசைக்ரமமாக சிவபுரமடைகிறான், இவ்விடத்தில் எது எது பக்தியால் சிவயோகிக்கு கொடுக்கப்படுகிறதோ? அதில் ஒவ்வொரு பரமாணுவும் கல்பம்வரை சிவபுரம் அடையவேஹேது. ஜபம் அர்ச்சனை ஹோமம் இவையாவும் குறைவின்றி பலனை அவனுக்குஉண்டாக்கும்.

பக்தியினாலோ இல்லாமலோ, ஸர்வமும் மநுஷ்யர்களுக்கு அங்கு அதிகலாபம் அடையப்படுகிறது. அதில் ஸந்தேஹமில்லை. வேறுக்ஷேத்ரங்களில் இம்மாதிரி இல்லை. ஆகையால் இதையே விசேஷமாய் சொல்லப் படுகிறது. இவ்விடத்தில் செய்யப்பட்ட ஜபம் ஹோமம் அர்ச்சனை முதலியன பாபமுள்ளவர்களினால் செய்தாலும் அக்ஷயபலன் அடைவிக்கிறது. பித்ருக்களை உத்தேசித்து ப்ராம்ஹணர்களுக்குபோஜனம்முதலியன அவச்யம் செய்யவேண்டியது. அவர்களுடைய வம்சத்தில் உண்டான பித்ருக்கள் உடனே சிவபுரம் அடைகின்றனர்.

வேறு இடத்தில் இறந்தவனுக்கு இவ்விடத்தில் பிண்டம்தர்ப்பணம் முதலியன செய்தாலும் அவனும் இந்தக்ஷேத்ரத்தில் மரணமடைந்தாலும் அவன்போல் ஆகிறான் அதில் ஸந்தேஹமில்லை. வேறுஇடத்தில் இறந்தவனுக்குஎலும்புகளைஅங்குவைப்பானேயாகில் அவன் பாபியாய்இருந்தாலும் சிவஸ்தானமடைகிறான் அதில் ஸந்தேஹமில்லை. வேறு இடம் இறந்தவர்களுக்குஇவ்விடம் மறுபடியும் ஸம்ஸ்காரகர்மா செய்வானாகில் அவனுக்கு முக்தி உடனேகிடைக்கிறது. இவ்விஷயத்தில் விசாரிக்கவேண்டியதில்லை. ஸ்நான காலத்திலோ ஜபகாலத்திலோ ஸபாபதியை தர்சனம் செய்த மாத்ரத்தினாலேயே மநுஷ்யர்களால் நினைக்கப்படும் முக்திஎல்லாம் அடைகிறது. ஸந்தேஹமில்லை.

இவ்விஷயத்தில் அதிகம் சொல்லாமல் சுருக்கமாக சொல்கிறேன். இதை கேள். தரிசனம் செய்வதாலும் மரணம் அடைவதாலும் இதைப் போல் மற்றொன்றும்மோக்ஷமளிக்காது. இதுவிஷயம்அதிகரஹஸ்யமானது என்னால் இதற்குமுன் யாருக்கும் சொல்லியதில்லை. இந்தக்ஷேத்ர மஹாத்மியம் ஸர்வ வேதாந்த ஸம்மதமுள்ளது. வேதவாக்யங்களினால் முக்யமாக சிந்திக்க அதிக விஷயமுள்ளது. ஈச்வரப்ரஸாதத்தினால் மட்டுமே அதை நான் அறிகிறேன். பரமேச்வர பக்தனான எனதுபக்தர் ஸூத பௌராணி

கருக்கு ஏகாந்தத்தில் இந்த மஹாத்மியத்தை முன்பு போதிக்கப்பட்டது. இந்த க்ஷேத்ரமஹாத்மியத்தை அவர்நன்கு அறிவார். வேறு ஒருவரும் இப்பட்டண மஹிமையை அறியமாட்டான். என் பக்தனான உனக்கு சொல்லப்பட்டது.

ஸ்ரீமத் தப்ரஸபா மத்தியில் நர்த்தனம் செய்யும் ஈசன் தர்சனமே எல்லோர்க்கும் முக்தியை கொடுக்கக்கூடியது. அதில் ஸந்தேஹமில்லை. ஸ்வபாவமாகவே உயர்வுள்ளது. நான் சொல்லிய விஷயம் ஈச்வரப்ரஸாத மில்லாத மநுஷ்யர்களுக்கு புத்தியில் ஒருபோதும் எட்டாது. ஈசன் பாதாம்புஜத்தில் பக்திஉள்ள ப்ராம்ஹணனுக்கு இந்த அர்த்தம் உள்ளது என உனக்கு தெரிவிக்கவேண்டியது எனது கடமை. வேறு ஒருவருக்கும் இதை சொல்லக்கூடாது. இவ்விடத்தில் எவர்கள் பாப கூட்டமுள்ள அஹம்பாவத்தில் பொட்டையர்களோ அவர்கள் பார்க்கவேணடியதைப் பார்க்கமாட்டார்கள். கேட்கவேண்டியதை கேட்கமாட்டார்கள் கஷ்டம். அவர்கள் மோஹமஹாத்மியத்தை நான்யாரிடம் சொல்வேன். அவ்விதமே புராணம் சாஸ்த்ரம் முதலியன இதையே நன்கு சொல்கின்றன.

அவ்விதமே ஆகமங்களில் மோஹமடைந்தவர்களும் இதை அறிய மாட்டார்கள் என்ன செய்கிறது. ஸம்ஹாரம் பிள்ளை வீடு நிலம் பணம் தான்யம் முதலிய வஸ்துக்களில் மூழ்கி மோஹமடைந்த மநுஷ்யர்கள் என்னால் சொல்லியதை ஒருபோதும் அறியமாட்டார்கள். அநேக ஜன்மாக் களில் சேர்த்துவைத்த ச்ரௌதஸ்மார்த்த கர்மங்களையே முக்யமுடைய மநுஷ்யர்களும் ஈசப்ரஸாதத்தை சாப்பிடுகிறவர்களிடம் என்னால்சொல்லி யதை அறிகிறார்கள்.

இது விஷயத்தில் அதிகம் சொல்லாமல் சுருக்கமாக சொல்லுகிறதை கேள். வேதஸித்தமுள்ள மஹாத்மியத்தைவேறு ஒருவனுக்கும் என்னால் சொல்லப்படாதவை. நீ வேதவாக்ய விசாரணை செய்தவன் மஹாபுத்திசாலி ஈச பக்தன்தானே அறிவாய் என்னாலோ ப்ரம்ஹாவினாலோ விஷ்ணு வாலோ சங்கரராலோ பாபபுத்தியுள்ள மநுஷ்யர்களுக்கு சொன்னாலும் ஏற்காது.

அப்படி இருந்தும் வேதாந்த ஸித்தமானது. ஈசனால் சொல்லியது. நான் சொல்கிறேன். ஸத்சித்மஹானந்த புதையல். ஸபாபதி உருவத்தை ஸபையில் பார்த்தவன் உடனே முக்திஅடைகிறான். த்யானயஜ்ஞம் செய்யும் மநுஷ்யர்களும் க்ருதயுகத்தில் மோக்ஷமடைந்தனர். அதுமுடியா தவர் த்ரேதாயுகத்தில் தபஸாலும் யஜ்ஞங்களாலும் மோக்ஷமடைந்தனர்.

அதுவும் முடியாதவர்கள் த்வாபரயுகத்தில் சிவனை பூஜைசெய்து மோக்ஷமடைந்தனர். ஸர்வ தோஷங்களுக்கும் இருப்பிடமான இக்கலியுகத்தில் ப்பாபத்தையே முக்யமடைந்த மநுஷ்யர்கள் ஸர்வதர்மங்களையும்கவனியாது ஆசை கோபம் பொய் திருடுதல் பேராசை முதலிய குணமுடையவர்களாய் ஈசனை அறியமாட்டார்கள். பிறந்தாலும் மோக்ஷமடையமாட்டார்கள். இந்த யுகங்களில் எல்லா ஜந்துக்களுக்கும் முக்தி ஸித்திக்க தேவதேவரான சந்த்ரனை சிரஸில் அலங்காரமடைந்த சங்கரர் க்ருபைக்கு புண்டரீகபுரம் என்ற பெயரடைந்த இடத்தில் அம்பிகையுடன் சேர்ந்து நர்த்தனம் செய்துகொண்டு இருக்கிறார். ப்ரம்ஹா விஷ்ணு இந்த்ரன் இவர்களை ஜகத்தின் ஸ்ருஷ்டியாதி கார்யம் கவனிக்க மூன்றுகுண சரீரமடைந்து உலகத்திற்கெல்லாம் அவர் ச்ருதியில் சொல்லியபடி புண்டரீகபுர சித்ஸபையில் ஸாக்ஷாத்தாக ஆனந்த நர்ந்தனம்எப்பொழுதும்செய்கிறார்.

உருவமில்லா ஈசன் பரமானந்த சித்ஸ்வரூபன். எங்கிருந்தபோதிலும் பரமானந்த சித்ஸ்வரூபமாகி அம்பிகையோடும் மூன்று கண்ணோடும் நீண்ட கழுத்தோடும் கட்டிய ஜடையோடும் கங்கை சந்த்ரன் இவர்களோடும் தாமரைபோன்ற கைகளினால் தாங்கும் புலித்தோலுடனும் சேர்ந்து விபூதிபூசிய சரீரமுடையதாய் கொஞ்சம் வளைத்த இடதுகாலுடன் தர்சனத்தாலேயே மநுஷ்யர்களுக்கு முக்தியை கொடுப்பவராய் வலதுகாலில் வைத்து அமுக்கிய முஸலகனை அங்கமுடையவராகி இன்றைக்கும் எல்லோர்க்கும் எப்பொழுதும் மங்களகர உருவமாய் காண்கிறார்.

எல்லா உலகங்களிலும் இவ்விடம் தர்சனம் செய்வதாலேயே சிவன் முக்தி கொடுக்கக்கூடியவர் என அர்த்தம் அப்படி இருந்தும் வெவ்வேறு இடத்திலும் முக்தியை கொடுக்கக்கூடியவர் உள்ளவரே. இக்கலியுகத்தில் கடுமையான ஸர்வ தோஷமடைந்தவன். ஸபேசனது தர்சனத்தைகாட்டிலும் மற்றொன்று முக்தி அடையமுடியாது. இதுவே உண்மையாக உனக்கு சொல்லப்பட்டது. ஆகையால் கலியுகத்தில் எந்த மநுஷ்யர்களும் பாப நிவாத்திக்காக அந்த க்ஷேத்ரம் தர்சிக்கவேண்டியது அவச்யம்.

அவ்விடத்தில் குழந்தையோ பெரியோர்களோ தாங்கினாலும் நான்கு வேதமறிந்து நூற்றுக்கணக்கான அச்வமேதயாகம் செய்த அவர்கள் குழந்தை தூங்கினாலும் அவன்தான்ச்ரேஷ்டன். ஆகையால் அவ்விடத்தில் ஸர்வப்ரியத்துடன் நித்யம் நீ வஸிக்கவேணும். ஜ்ஞானத்தினாலோ அஜ்ஞானத்தினாலோ எந்த மநுஷ்யன் ஸர்வ பாபங்களை செய்தாலும் அவ்விடத்திலேயே வஸிப்பானாகில் நித்யம் ஸாந்நித்யம் கிடைக்கிறது.